
75

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை.மு.கோதைநாயகி அம்மாள்

REGISTRAR OF ... 24 OCT 1940 MADRAS



## "சந்தோஷ மலர்"

(புதிய தொடர் நாவல் ஆரம்பம்)

74757

மற்ற விசேஷ அம்சங்கள்


| | | |
|---|---|---|
| ரேடியோ டயரி | — | வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L. |
| "தாளபத்த சங்கீதம்" | — | வை. மு. கோதைநாயகி அம்மாள். |
| வாணியின் பிரஸாதம் | — | " |
| அநுபவ நீதிசாரம் | — | " |
| மதிப்புரை | — | " |


க்ஷேமலாபங்கள், பரிசு விவரங்கள்

ஜூலை 1940

சந்தோஷ மலர்
[ ஆரம்பம் ]

அணி 2

# க்ஷேமலாபங்கள்

அன்பர்களே!

இந்த இதழில் மோகினிச் செல்வி, "சந்தோஷ மலர்" என்கிற நாவலை தாங்கி வருகிருள். அன்பர்களின் ஆசி வழக்கம்போல் அச் சிறுமிபா நிறைந்திருக்கும்படி வேண்டுகிறேன்.

"ஆத்மசக்தி வெளியிட்டு ஆறுமாதமாகிறதே, ஏன் இன்னெரு புத்தகம் எழுதவில்லை ?" என்று சில நேயர்கள் கடிதம் எழுதியிருக்கிருர்கள். அவர் களுடைய ஆவலை நான் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். கூடிய சீக் கிரத்தில் தனிப் புத்தகம் வெளியிட முயற்சி செய்கிறேன்.

ஆசை என்பது ஒவ்வொருவருடைய மனத்திலும் பொங்குவது இயற் கையே! தாம் எழுதிய கட்டுரை, கதை முதலியன மோகினியில் ஒவ்வொரு இதழிலும் வெளியிடவில்லையே என்று பெருங் கோபங்கொண்டு சிலர் கடி தம் எழுதியிருக்கிருர்கள். நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், பிரசுரி வேண்டிய அம்சத்தில் சேராதவைகளாக வந்திருப்பவைகளை எப் போடமுடியும்? அதிலும் நம் மோகினி மாதப் பத்திரிகை என்பன இப்பொழுது போடும் பக்கங்களுக்குமேல் போட்டால் வெளிநாட தபாற் செலவு இரண்டத்தனையாகிறதென்பதையும் நேயர்கள் மறக்க கூடாது. நாம் வழக்கமாகப் பிரசுரிக்கவேண்டிய விஷயங்களுக்கு இட கண்டு மிஞ்சினல்தான் பிறருடையதைப் போடமுடியும். இவ்விதழில் இட மில்லாததால், முக்கியமான வனிதாமண்டலம், விகடவேடிகள், வெள்ளித் திரை முதலியன நின்றுவிட்டன. அடுத்த மாதம் கட்டாயம் பிரசுரிக் கின்றேன்.

சாமளநாதன், நவநீதகிருஷ்ணன், சுகந்தபுஷ்பம் முதலிய புத்தகங் களில் வெளியான கீர்த்தனைகளை ஸ்வரப்படுத்திப் பிரசுரிக்க வேண்டுமென பல நேயர்கள் விரும்பியதால், இவ்விதழிலும், அடுத்துவரும் இதழ்களிலும், ஷை கீர்த்தனைகளை வாணியின் பிரஸாதம் என்ற தலைப்பில் வெளியிடுகிறேம்.

சென்ற மாதம் 20ந் தேதி திருச்சி ரேடியோ நிலயத்தில், "தாளபத்த சங்கீதம்" என்கிற விஷயத்தைப்பற்றி சொற்பொழிவு நடந்ததைப் பாராட்டிப் பல அன்பர்கள் தமது சந்தோஷத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். அவர் களுக்கெல்லாம் என் மனப்பூர்வமான நன்றியுடன்கூடிய வந்தனத்தைச் செலுத்துகிறேன். அந்த நிகழ்ச்சி அத்தனை சிறப்பாகப் பரிமளித்ததற்குக் காரணம் திருச்சி ரேடியோ நிலயத்தார்கள் உத்ஸாகத்துடன் ஒத்துழைத்து அதற்குள்ள 15 நிமிஷத்திற்குமேலாகச் சில நிமிஷ நேரமும் கொடுத்து உதவியதேயாகும். அவர்கள் எல்லோருக்கும் எனது வந்தனம் உரித்தாகுக.

வை. மு. கோ.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 17 | விக்ரம ௵ ஆனி ௴ ஜூலை 1940 | இதழ் 7 |
| --- | --- | --- |

25 OCT. MADRAS

இராகம் : ஆபோகி. தாளம் - த்ரிபுட.

பல்லவி

இனவம்ச ராமா! இதி சமயமுரா கனுலாரஜூசி காவவையராமா! (இ)

அனுபல்லவி

தனவாடனீ தலசகனும்டே நனுப்ரோசுவாரு நினுவிடசிலேரு. (இ)

சரணம்

முனுநின்னு வேடி மொரபெட்டின
வனிதப்ரக்லாத கொனியாடெ த்ருவ
கனுடைன விபீஷணுனி காசின
வனஜாக்ஷா கோதாவல்லப வேகராரா! (இ)

டி கீர்த்தனையினுடைய ஸ்வரத்திற்கு உள்ளே 15-வது பக்கம் பார்க்கவும்.

## சஷ்டியப்தபூர்த்தி விழா


கடந்த 40 வருஷ காலமாகப் பலவிதங்களிலும் தமிழ் இலக்கிய உலகில் சேவைசெய்து அழியாப் புகழ்பெற்றுள்ள பிர்ஹ்மஸ்ரீ. வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியாருக்கு நிகழும் விக்ரம௵ ஆனி௴ 26௳ (9-7-1940) யன்று சஷ்டியப்தபூர்த்தி நாள் வருகிறதென்பதை அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம். டி சுபதினத்தை "பெரம்பூர், கல்வி அபிவிருத்தி சங்கத்தார்" கொண்டாட உத்தேசித்திருப்பதை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். அவர்களுடைய முயற்சி வெற்றிபெறத் தமிழபிமானிகளை உதவி புரியுமாறு கோருகிறோம்.

ஸ்ரீ. பாரதியாருக்கு தீர்க்காயுளையும், சகல மங்கள சௌபாக்கியங்களையும் தந்தருளுமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

வை. மு. கோ.
1—7—40

நித்தியானந்தரின்

# ரேடியோ டயரி



[V. M. SRINIVASAN, M.A , B.L.]

லாவண்ய சர்மா :—என்ன மிஸ்டர் ஆனந்தம்! 10 நாளைக்கு ஆனந்தமாகச் சுற்றிவிட்டு வந்தாப்பலே இருக்கு. என்னவிசேஷம்?

நித்யானந்தர் :—உண்மையிலேயே ஆனந்தமாகத்தானிருந்தது. 10 நாளும் 10 நிமிஷமாய்ப்பறந்ததுபோலிருந்தது. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடமாகச் சுற்றினோம். எங்கள் கோஷ்டியின் குதூகலத்தை என்னென்று சொல்வேன்? நீர்தான் வர மறுத்தீரே.

லா :—நான்தான் எதற்கும் கொடுத்துவைக்காதவன் என்று தெரியுமே. அதைப்பற்றி நினைத்து என்ன பயன்? அது கிடக்கட்டும். ரேடியோ இல்லாது எப்படிக் காலம்கடத்த முடிந்தது?

அனுவசிய பீதி.

நி :—அது ஒன்றில்தான் அந்த பத்து நாட்களில் நான் கஷ்டப் பட்டது. அவ்வப்போது செய்திகளறியச் சாத்தியப்படவில்லை. எந்த ஹோட்டலில் ரேடியோவைப் பார்த்தாலும் அங்கு செய்திகள் கேட்க உட்கார்ந்துவிடுவோம். ஒவ்வொரு முதலாளியும் டெல்லி செய்தியறிக்கை தவிர வேறு எதுவும் வைக்க மறுத்துவிட்டார். முழுவிவரங்களுக்கு லண்டன் வைக்கும்படி எவ்வளவு கேட்டும் ஒரே பிடியாக முடியாதென்று கூறிவிட்டார்.

லா :—ஏன் அப்படி? விரோதிகளின் ரேடியோ சரக்குகளைத் தானே பொதுஇடங்களில் கேட்கக்கூடாது. பிரிட்டிஷ் சாம் ராஜ்ய நிலைய அறிக்கையைக் கேட்க என் அப்பேர்ப்பட்ட பயம்?

நி :—அந்த அனுவசியமான பீதிக்கு ஆதாரமேயில்லை. சர்க்கார் அறிக்கையைத் தப்பிதமாக அர்த்தம் செய்துகொண்டு இம்மாதிரி வீண் கலக்கத்தைப் பலர் அடைந்திருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

லா :—அந்த படலத்தை அத்துடன் நிறுத்திக்கொண்டு உம் முடைய வழக்கமான ரேடியோ புராணத்தில் மே-ஜூன் மண்டலத் தைப்பற்றி ஆரம்பிக்கலாமே.

நி :—அதெற்கென்ன தடங்கல்? தாராளமாய் நீளமாய் மணிக் கணக்கில் விவரித்துக்கொண்டே யிருக்கலாம். குறைகள், பாராட் டுகள், அபிப்பிராயங்கள், யோசனைகள், கேள்விகள் முதலியவை களுக்கு என்ன குறைவு?

லா:—ஏதேது? லிஸ்ட் ரொம்ப பெரிதாக விருக்கிறதே. அப்படி யாயின் சீக்கிரம் சொல்லிமுடியும்.

183043

## குறைகள்.

நி:—வழக்கம்போல குறைகளைப்பற்றி முதலில் எடுத்துக் கொள்ளுகிறேன். சிறிது காலம் சற்று குறைந்திருந்த இசைத்தட்டு சங்கீத ஒலிபரப்பு சமீபத்தில் திரும்பவும் அதிகரிக்கிறது எனக்குப் பெரிய குறையாயிருக்கிறது. கேட்டவைகளையே எத்தனைதரம் கேட்பது? தினமும் காலையில் கணீரென்று 8 மணி யடித்ததும், அந்த நாதம் ஓய்வதற்குள் கம்பீரமாகவும் இனிமையாகவும் கோஷ்டி வாத்தியத்தைக் கேட்கையிலிருந்த ஆனந்தத்தை இப்போது துரத்தி விட்டார்கள். ஏன் இப்படிச் செய்தார்களென்று புரியவில்லை.

லா :—திருச்சி நிலையத்திற்கு நல்ல பெயர் சம்பாதிக்கும் அம்சங்களுள் கோஷ்டி வாத்தியம் ஒன்று என்று அடிக்கடி என்னிடம் சொல்வீரே. இப்போது ஏன் ஏமாற்றம்?

நி:—இப்போது காலையில் சங்கீதாரம்பம் இசைத்தட்டுடன் நடக்கின்றது. இந்த மாறுதல் அதிருப்தியளிக்கின்றது. வழக்கம் போல் நிலைய வாத்திய கோஷ்டி சங்கீதம் ஒலிபரப்பினால்தான் நன்றாயிருக்கும். பொதுவாக, இசைத்தட்டுகளைப் போட்டு நேரத்தைக் கடத்துவதைவிட ஒலிபரப்பு நேரத்தையே குறைத்துவிடுவது உசிதம்.

லா :—வாஸ்தவந்தான். கேட்டதையே கேட்கிறதென்றால் பொறுமையைச் சோதிக்கிறாப்போலல்லவா ஆகிறது!

நி :—அது மாத்திரமா, பொறுமையைச் சோதிக்க இப்போது பிடில் முன்வந்திருக்கே!

லா :—அதென்ன அப்படிச் சொல்கிறீர்? உமக்குத்தான் பிடில் வாத்திய சங்கீதம் ரொம்பவும் இஷ்டமாயிற்றே.

நி :—இஷ்டமில்லையென்று யாராவது சொன்னார்களா என்ன? அததற்கு ஒரு அளவு, வேளை இல்லையா? ஒரு மணி முதல் ஒன்றரை வரை ஒருவர் பிடில் வாசிக்கிறார். அலுத்துப்போன உருப்படிகளை ஜீவனற்று கொட்டாங்கச்சி பிடிலில் வாசிப்பதுபோல வாசிக்கிறார். அரைமணிக்கெல்லாம் இன்னுமொருவர் வந்து இரண்டு மணி முதல் இரண்டரைவரை பிடில் வாசிக்கிறார். ஒருநாள் என்னவாயிற்று தெரியுமா? 7-30 முதல் 8 வரை சென்னையில் பிடில். 8-20 முதல் 8-50 வரை திருச்சியில் பிடில். பிற்பகல் 1 முதல் 1-30 வரை சென்னையிலும், 1-35 முதல் 2 வரை திருச்சியிலும் பிடில். ஸர்வம் கிருஷ்ணமயம் என்பதுபோல ஸர்வம் பிடில்சங்கீதமயம் என்றிருந்தது. நன்றாயிருந்தால் பரவாயில்லை. பெரும்பாலும் அதிருப்திகரமாக இருக்கிறது. கேட்டுக்கேட்டு அலுத்துப்போன பாட்டுகளையும் ரஸிக்கும் வண்ணம் வாசிக்கக்கூடியவர் வெகு சிலரே.

லா :—வாய்ப்பாட்டு சங்கீதத்தைவிட வாத்திய சங்கீதமே அதிகம் ஒலிபரப்புகிறார்களா?

நி :—அப்படிச் சொல்வதற்கில்லை. ஆனால் முன்னைவிட அதிகமாக வாத்திய சங்கீதம் தற்போது ஒலிபரப்பப்படுகிறது.

லா:—பிடில் தவிர மற்ற வாத்தியங்களுக்கு முக்கியத்வம் கொடுப்பதில்லையா?

நி:—பிடில், வீணை, புல்லாங்குழல், நாகஸ்வரம் முதலிய வைகளே பெரும்பான்மையான நேரத்தை எடுத்துக்கொள்கின்றன. இவைகளுள் பிடில்தான் முதல் மரியாதை பெற்றுள்ளது. ஒரே நிலையத்திலிருந்து ஒரே நாளில் ஒரே ஒலிபரப்பில் இருவர் பிடில் வாசிப்பதை நிறுத்துவது உசிதம். பொதுவாக, மாலை 5-20 முதல் 6 வரையிலும், இரவு 9-50க்கு மேலும் வாத்திய சங்கீதமிருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது.

லா:—அதிருக்கட்டும். சென்னையில் ஆண்டு விழா கொண்டாடினர்களாமே எங்ஙனமிருந்தது? திருச்சி கொண்டாட்டத்தைப் போலிருந்ததா?

நி:—நான்தான் அப்போது ஊரிலில்லையே. நம்ம ஜூனியர் இருக்கானேல்லையோ. அன்றைய நிகழ்ச்சிகளைப்பற்றி அவனுடைய ரிபோர்ட்டைப் படிக்கிறேன் கேளும். "மிகவும் சிறந்து விளங்கி யவை: துதி, அறுவடை, விஜயலக்ஷ்மி-நடராஜன் பாட்டு, பட்டம்மாள் நடத்திய வாத்திய கோஷ்டி, மீனாக்ஷிசுப்ரமணியம், ருக்மிணி லக்ஷ்மிபதியின் வீணை முதலியவைதான். அடுத்தப்படியாகத்தான் மற்ற நிகழ்ச்சிகள். சுருங்கச் சொல்லின் புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டதுபோலத்தானிருந்தது" என்று எழுதியிருக்கிறான். பல நிகழ்ச்சிகள் பெரும் ஏமாற்ற மளித்தனவாம்.

லா:—பொதுவாக சென்றமாதத்திய சென்னை நிகழ்ச்சிகள் எப்படி?

நி:—பிரபலஸ்தர்களின் சங்கீதச் கச்சேரிகளைத்தவிர மற்ற நிகழ்ச்சிகள் பெரும்பாலும் திருப்திகரமாயில்லை. உதாரணமாக குமணன், திருவாழத்தான் என்ற நாடகங்கள் ரஸிக்க முடியாதவை யாக 'நடிக்கப்பட்டன'. இந் நிலைய நடிகர் ஒருவர் நடிப்பு என்ற பெயரில் சில சப்தங்கள் செய்கிறார். ஒரே நாடகத்தில் பல பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு சித்ரவதை செய்கிறார். இயற்கையான நடிப்போ, உச்சரிப்போ ஷை நாடகங்களில் காண்பது அரிதாயிருந்தது. இது இப்படியிருக்க, திண்ணைப்பேச்சு என்று ஒரு நிகழ்ச்சி அடிக்கடி நடைபெறுகிறது. "இவ்வளவு போதாதா இன்றைக்கு?" என்று அதில் ஒரு நாள் கேட்டார்கள். "இன்றைக்கு மாத்திரமில்லை; இன்னும் பத்து வருடங்களுக்குப் போதும்" என்று சொல்லும் வண்ணம் இருந்தது. ஆங்கில நிகழ்ச்சிகள் பொதுவாக நன்றாகவிருக்கின்றன.

பாராட்டுகள்.

லா:—திருச்சி நிகழ்ச்சிகள் மாத்திரம் நன்றாயிருக்கின்றனவென்று அடிக்கடி சொல்கிறீரே. அவர்கள் மாத்திரம் எப்படி வெற்றியடைகிறார்கள்?

நி:—அதை நான் மாத்திரமா சொல்கிறேன்! அது பொதுஜன வாக்கு. நல்ல சரக்கு இருக்குமிடத்தில் மதிப்பு இருந்துதானே

தீரும்! அவர்களுடைய வெற்றியின் ரகஸியத்தை நான் கண்டு பிடித்துவிட்டேனே!

லா:—என்னது அது?

நி:—ஒத்துழைப்பு, பொறுமை, உத்ஸாகம், திறமை யாவும் ஒன்றுகூடியுள்ளன. வெற்றிக்கு என்ன சந்தேகம்? "இன்று தோட்டியாக நடிக்கத் தயார்; நாளை ராஜாதிராஜனாக நடிக்கத் தயார். இன்று அழவும், நாளை சிரிக்கவும் தயார். நடிப்புக்கலைக்கு சேவைசெய்ய எந்த விதத்திலும் தயார்" என்ற மனப்பான்மை பூரணமாகக் குடிகொண்டிருக்கிறது. ஒத்துழைப்பும், அதே சமயத்தில் நடிப்பின் சிகரத்தை எட்டிப்பிடிக்க ஒருவருக்கொருவர் போட்டி. இதனால்தான் கால்மணி சிறு நாடகமாயினும் சரி; ஒன்றரைமணி பெரிய நாடகமாயினும் சரி கூடியவரை எப்போதும் நன்றாகவே அமைகிறது. 'இருட்டில் கேட்ட குரல்கள்' 'யாருக்கு வோட்டு' போன்ற நிகழ்ச்சிகளை என்றுமே மறக்கமுடியாது. 'ஆர்ப்பி' அல்லது 'சிட்டி' தயாரித்த நிகழ்ச்சி யென்றால் கட்டாயம் நன்றாயிருக்குமென்று என்றும் எதிர்பார்க்கலாம் என்ற நல்ல பெயரை ஸ்தாபித்துவிட்டார்கள். சுப்பனுக்கு பதக்கம் பண்ணிப் போட பல பேர்கள் காத்திருப்பார்களென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. அவ்வளவு இயற்கையாக நடிக்கிறான்.

லா:—அவனைப் பற்றித்தான் பலதரம் சொல்லியிருக்கிறீரே.

நி:—ஆமாம்...ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. திருச்சி நிலைய வாத்தியகோஷ்டியுடன் யாரேனும் கலந்து பாடினால் நன்றாயிருக்கும் என்று முன்பு சொன்னேனே நினைவிருக்கிறதா?

லா:—ஆமாம். அதுமாதிரி பாடினார்களா?

நி:—சென்ற வாரத்தில் பாடினார்கள். மிகவும் நன்றாயிருந்தது. அவர்களுடைய வெற்றிக்குக் காரணம் ஸ்ரீ கே. ஸி. தியாகராஜன் தான். (சகலகலாவல்லபராகவல்லவோ விளங்குகிறார் அவர். வாய்ப்பாட்டு, பிடில், மஹா நாடக வீணை, ஜலதரங்கம் எல்லாவற்றிலும் பயிற்சி. சகோதர வித்வான்களுடன் பூரண ஒத்துழைப்பு. இதுதான் வெற்றியின் ரகஸியம்.) சங்கீத சப்த உதாரணங்களுடன் பேச்சு ஒலிபரப்புகையில் ஷை கோஷ்டியாரின் உத்ஸாகமும், ஒத்துழைப்பும் கூறத்திறமில்லை.

அபிப்பிராயம்: யோசனைகள்.

லா:—யோசனைகள், கேள்விகள் என்றெல்லாம் முதலில் அடுக்கிக்கொண்டே போனீரே, எதைப்பற்றி யோசனைகள்?

நி:—நம் யோசனைகளை யார் ஸ்வாமி கேட்கிறார்கள்? நாமிருவரும் வேண்டுமானால் பேசிக்கொள்ளலாம். (1) குழந்தைகள் மனதில் நன்கு பதியும் வண்ணம் நற்போதனைகளை போதிக்கவேண்டும். வருங்காலத்திய தலைவர்களாக அவர்களை உருப்படுத்துகையில் கடமைகளைப்பற்றி தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். பெரியோர்களுக்கும், குடும்பத்திற்கும், தேசத்திற்கும், இவ்வுலகத்

திற்கும் அவரவருடைய கடமைகள் யாவை என்பதை (தத்துவ ஞானி உபன்னியாஸிப்பதைப்போலில்லாமல்) சுலபமாக நன்கு அறிந்துகொள்ளும் வண்ணம் மிகச்சிரத்தையுடன் எடுத்துரைக்க வேண்டும். குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளில் கோலாட்டம், சிறுகதை, புதிர் முதலியனதான் இருக்கலாம் என்று நில்லாமல் மேற்கூறிய விஷயத்தையும் சேர்த்துக்கொள்ளுதல் அவசியம். (2) சங்கீத அப்பியாஸத்தை தினசரி நிகழ்ச்சியாக அமைக்கவேண்டும். குழந்தைகளுக்கு சங்கீதத்தில் ஒரு ஆசையையும், உத்ஸாகத்தையும் ஏற்படுத்தவேண்டும். (3) சங்கீதத்தினால் தேசபக்தியையும், தெய்வ பக்தியையும் பரவச் செய்யவேண்டும். இது விஷயமாக பஜனைகள் மிகவும் அரிய சேவை செய்கின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலையில் அரைமணி பஜனை ஒலிபரப்பினால், நிலையத்தார் சமூகத்திற்குப் பெரிய சேவை செய்தவர்களாவார்கள் என்பதில்சந்தேகமேயில்லை. (4) மாதர்களுக்கான நிகழ்ச்சிகள் எதிர்பார்த்தபடி வெற்றி பெறாததற்குக் காரணம் பிரதி வாரமும் ஒரே மாதிரியிருப்பதும், அபஸ்வர சங்கீதம் அதிகமாக விருப்பதும் தான். ஷை நிகழ்ச்சிகளை ஒரு பக்ஷத்திற்கு ஒன்று என்று அமைத்து, அதிலிருந்து அபஸ்வர சங்கீதத்தை நீக்கினால் நன்றாயிருக்கும். நல்ல அபிமானமும் ஆதரவும் ஏற்பட்ட பிறகு வாரத்திற்கொரு முறையாக அமைத்துக்கொள்ளலாம்.

## கேள்விகள்.

லா :—கேள்விகள் என்றீரே, எதைப்பற்றி?

நி :—இரு முக்கியமான விஷயங்களைப்பற்றித்தான். இதற்குப் பதில் மத்திய சர்க்காரிடமிருந்தல்லவா எதிர்பார்க்கவேண்டும்!

லா :—சர்க்காரிடமிருந்தா? என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்?

நி :—ஒரு நிலையத்தின் 'வேவ்லெங்தை' மாற்றுவதோ, அல்லது செய்தி யறிக்கையின் நேரத்தை மாற்றுவதோ மத்திய சர்க்காரின் இஷ்டம்தான் முக்கியம். உதாரணமாக, திருச்சி நிலையம் 397 மீட்டரில் ஒலி பரப்புவதைவிட சுமார் 230 மீட்டரில் ஒலி பரப்பினால் நமக்கு ரொம்ப சௌகரியமாயிருக்கும். ஒரே சமயத்தில் இரு நிலையங்களிலும் நல்ல நிகழ்ச்சியிருக்கும்போது நிமிஷத்திற்கு நிமிஷம் ஒரு ஊருக்கும் மற்றொரு ஊருக்கும் போவது ரொம்ப சுலபமாயிருக்குமல்லவா? இரண்டாவதாக, மாலை 5-15 மணிக்கு இருக்கும் தமிழ்ச் செய்தியறிக்கையை பிற்பகல் சுமார் 2 மணிக்கு வைத்துக்கொண்டால் தேவலை. காலை 8-15 மணிக்குப் பின் மாலை 5-15 மணிக்குத்தான் அறிக்கை. அதன் பின் இரண்டு மணி நேரத்தில் விரிவான செய்தி யறிக்கை வெளிவருகிறது. காலை, பிற்பகல், இரவு மூன்று வேளைகளில் தமிழ்ச் செய்தியறிக்கை இருந்தால் ஆங்கிலம் தெரியாத தமிழ் ரேடியோ அபிமானிகளுக்கு அவ்வப்போது செய்திகள் தெரிய சாதனமாயிருக்கும்.

லா :—வெகு நேரமாகிவிட்டது. உத்தரவு தருகிறீரா?

# அனுபவ நீதிசாரம்

**வை. மு. கோ.**

1. பிறருடைய விஷயங்களை யறிவதிலேயே சிலருக்கு நாட்டம். அதற்காக தமது நேரத்தைப் பெரும்பாலும் செலவிடத் தியங்குவதில்லை. இத்தகையவர்களுக்கு போலீஸ் ஸி. ஐ. டி. உத்தியோகம் கொடுத்தாலும் உபயோகம் உண்டு. வீணர்களுக்கு லாபமென்ன?

2. கல்யாண காலம் பிறந்துவிட்டாலே மக்களின் மனத்தில் குதூகலமும் பிறந்துவிடுகிறது. பிள்ளைவீட்டுக்காரர்களாயிருந்தாலோ பேராசையும் கூடவே பிறந்துவிடுகின்றது. பிள்ளைகளை விற்பதற்கொப்ப வரதக்ஷிணைவாங்க விலையும் பேச முன்வந்துவிடுகிறார்கள்.

3. கடன்வாங்கச் சளைக்காத மனிதர்கள் எத்தகைய கஷ்டத்திற்கும் சளைக்கமாட்டார்கள். கடன்வாங்கப் பயப்படுவோர் கூடுமான வரையில் அமைதியான வாழ்க்கை நடத்துகிறார்கள். இரண்டில் எது சிரேஷ்டம்?

4. வயது முதிர்ந்த காலத்தில் தாயாரைவைத்து ரக்ஷிக்கவேண்டிய மகன் இன்று மனைவியின் ஹிதோபதேசத்தினால் பெத்த அன்னையின் உள்ளம் பதறச் செய்தால், நாளை தானும் அந்த ஸ்தானத்திற்கு வரும்போது எப்படி இருக்கும் என்பதை மறந்துவிடுகிறார்கள் சிலர். பெரியோரை அலக்ஷியம் செய்வதும் கடவுளை அவமதிப்பதும் ஒன்று.

5. நாகரீகத்தின் எல்லையை தினேதினே உலகம் எட்டுகிறதெனினும் அவரவர்களுக்குத் தக்க முறையில் அளவுடன் அந்த நாகரீகத்தை அனுஷ்டிப்பதுதான் அழகேயன்றி விபரீதமாகப் போனால் அதில் ருசியே இல்லை. கவுன் போட்டுக்கொண்டு, தலையைப் பின்னி பழங்காலத்து எடுத்துக் கட்டுக் கட்டிக்கொண்டு, கொட்டை சாமந்தி யணிந்து நெத்தியில் திருமண் ஸ்ரீசூர்ணம் தரித்தால் எத்தனை பொருத்தமோ அத்தனை பொருத்தமாகத்தான் இருக்கும்.

6. காலத்திற்குத் தக்க முறையில் சிலவற்றை மாற்றிக்கொள்ள வேண்டுவது அத்யாவச்யம். உத்தியோக நிமித்தம் செல்லும் இடங்களில் அதிக ஆசாரம் பார்த்தால் நடக்குமா! கிணறோ, குளமோ இல்லாத ஊரில் அகப்பட்டுக்கொண்டவர்கள் குழாய்த் தண்ணீர் குடிக்கமாட்டே னென்றால் கட்டுமா! மாறுதல் இல்லாத மனித வாழ்க்கையேது?

7. தனக்கென்றால் ஒரு நியாயம். பிறர்க்கென்றால் ஒரு நியாயம். இந்த ஸித்தாந்தத்தை சில தந்திரசாலிகளிடம் கண்கூடாகக் காணலாம். 5 ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைத் தொழிலாளிக்கு ஒருமணி நேரம் தாமதமானாலும் சம்பளத்தைப் பிடிக்கும்படிச் சட்டமிடுவது; இந்த சட்டம் தன் விஷயத்தில்...

8. தம்மிடம் உள்ள கைச்சரக்குகளால் சில பாமர மக்களை எப்போதும் தம் கைக்குள் போட்டுக்கொள்வது ஒரு வச்யம். அதாவது—வைத்தியர், ஜோஸியர், மந்திரக்காரர், கை மருந்துகள் சில செய்யத் தெரிந்தவர்கள், பக்ஷண வகைகள் அதிகமாகத் தெரிந்தவர்கள், சாஸ்திரம் தெரிந்தவர்கள் முதலியோராவர்.

# புத்தக வியர்சனம்

**1. உலகம் சுற்றும் தமிழன் (விலை அணா 12.)**
**2. ஜப்பான் (விலை ரூ. 2.)**

[ஸ்ரீமான். ஏ. கே. செட்டியார், எழுதியவை. "சக்தி காரியாலயம்" 52, அரமனைக்காரத் தெரு, சென்னை.]

அதிசயத்திலும் அதிசயம் என்னவென்றால், நம் நாட்டில் தைரியமாக ஒரு மாணவன் படிப்பின நிமித்தம் டில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய ஊர்களுக்குச் சென்று வந்துவிட்டால், "அடடாடா! பையனின் தைரியமும் சாமர்த்தியமும் உச்சத்தை அடைந்துவிட்டதாக எல்லோரும் கருதிப் பாராட்டுவார்கள். அவனை மட்டுமின்றி அவனுடைய பெற்றோரையும் 'இத்தனை தூர தேசத்திற்கு எப்படித்தான் அனுப்பிப் பிரிந்திருந்தார்களோ!' என்றும் கொண்டாடுகிறார்கள். மேற்குறித்த ஊர்கள் நம் தாய் நாட்டின் ஒரு பாகம். நம் நிறத்தவர்கள் வசிப்பவை. பாஷை வேண்டுமாயின் புதிதாக இருக்கலாம். ஆங்கிலத்தையும், பலருக்குத் தெரிந்த ஹிந்தி பாஷையையும் கொண்டு ஒருவாறு சமாளித்துக்கொள்ளலாம் கப்பல் பிரயாணமும், கடல் கடப்பதும் அன்னியச் சாப்பாடும் அயல் முகங்களும் இல்லாதிருக்கையிலேயே இத்தனை பெருமைப்படுகிறோம்.

சமீபத்தில் எனக்கு அன்புடன் அனுப்பிய "உலகம் சுற்றும் தமிழன்; ஜப்பான்" என்கிற இரண்டு புத்தகங்களையும் படிக்கும்போது எனக்குண்டாகிய ஆச்சரியம் எல்லை கடந்தது. தாய் நாட்டிற்குள் சென்று சில காலத்திற்குள்ளேயே திரும்பியவர்களைக் கண்டு அத்தனை கொண்டாடிவிட்டால் ஆயிரக்கணக்கான மைல்களைக் கப்பலிலும், ஆகாயவிமானங்களிலும் சில இடங்களில் ரயிலிலும் அன்னிய தேசங்களில் பெரும்பாலான ஊர்களில் ஒரு இந்தியர் தைரியமாகப் பிரயாணம் செய்து வெற்றிகரமாகத் திரும்பி வருவதென்றால் அதுவல்லவோ பாராட்டக்கூடிய தைரியம்! அத்தகைய வீரர் யார் தெரியுமா! மகாத்மா காந்தியினுடைய படத்தைத் தயார் செய்யும் புனிதமான சேவையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு இரவு பகலாக உழைத்து வரும் [டாக்குமெண்டரி பிலிம்ஸைச் சேர்ந்த] ஸ்ரீமான் ஏ. கே. செட்டியார் அவர்கள்தான். அவருடைய தாய்தந்தையரும் மனைவியுமல்லவோ உண்மையான தைரியசாலிகள்! ஒவ்வொரு ஊரைப்பற்றியும் மனிதர்களைப்பற்றியும் அவர் கூறும்போது "ஐயோ! இத்தகைய இடங்களையும், மனிதர்களையும் நாம் எப்போது பார்ப்போம்?" என்று ஒரு க்ஷணம் நம்மை மீறி ஆசை உதயமாகிறது. அடுத்தக்ஷணமே...கப்பல், ஆகாயவிமானம் முதலியவற்றை நினைத்தால் பயமும், நமது பரம்பரைச் செல்வங்களான சாம்பார், கரி, இட்லி, தோசை, சட்ணி வகையராக்களை நினைத்தால்,—பெற்றோர்களையும் ச்ரமப்பட்டுப் பிரிந்துவிடலாம்; மேற்குறித்தவைகளைப் பிரிய மனம் வருமா?—கோழை நெஞ்சு பின்னுக்கு இழுக்கிறது. ஜப்பானைப்போல் நம் தேசத்திலும் பெண்களுக்குச் சகல உரிமைகளும் பொதுவாழ்க்கையில் சுதந்திரமும் வராதா என்றும் தோன்றுகிறது. நானே சொல்லிவிட்டால் ருசிக்காது. அப்புத்தகங்களை வாங்கிப் படித்து நீங்களும் இன்புறுங்கள். சக்தியுண்டானால் ஸ்ரீமான் ஏ. கே. செட்டியாரைப்போல் தைரியமாகச் சுற்றிவிட்டு சந்தோஷமாய் வாருங்கள். தைரியந்தானே முக்யமாகவேண்டியது. அது இருந்தால் எல்லாம் சாதிக்கலாமல்லவா?

# தாளபத்த சங்கீதம்*

[ திருச்சி ரேடியோவில் 20—6—40 அன்று மாலை 7 மணி முதல் 7-22 மணி வரை நமது ஆசிரியை ஸ்ரீமதி: வை. மு. கோதைநாயகியம்மாள் தாளபத்த சங்கீதம் என்பதைப்பற்றித் தக்க சங்கீத சப்த உதாரணங்களுடன் பேசியதன் முழு விவரங்கள்.]

சங்கீதத்தை விரும்பாதவர்கள் உலகத்தில் இருக்கவே முடியாது. அப்படிக்கிருக்க, நான் சங்கீதத்தை விரும்புகிறேன் என்றால் விரும்பாதவர்கள் யாரேனும் உண்டா என்கிற கேள்வி தான் பிறக்கும். பசு, பக்ஷி ஜாதிகள்கூட சங்கீதத்தில் லயிக்கும்போது ஆறறிவு படைத்த மானிடர்களைப்பற்றிக் கூறவேண்டுமா! மிகவும் கொடிய விஷத்தையுடைய சர்ப்பங்கூட இனிமையான மகிடி ஊதினால், புல்லாங்குழல் வாசித்தால் (இவ்விடத்தில் புன்னாகவராளி மகிடி வாசித்தல்) தன்னை மறந்து படமெடுத்து ஆடியும் மயங்கியும் இருப்பதை நாம் காண்கிறோம். உயர்தரமான அனேக கலைகளில் சங்கீதம் இன்றியமையாத பொக்கிஷம் போன்ற கலையல்லவா! பாமரர் முதல் பண்டிதர்வரையிலும், குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையிலும் தம்மையறியாது ஆனந்தப் பரவசத்திலாழ்த்தும் தன்னிகரிலாச் சக்திபெற்றது சங்கீதம் ஒன்றுதான். எத்தகைய சங்கீதத்தினால் மேற்குறித்த ஆனந்தத்தை எல்லோரும் அடைய முடியுமென்றால், தாளத்திற்குக் கட்டுப்பட்டு ச்ருதியில் சேர்ந்து கம்பீரமாகப் பாடும் சங்கீதத்தினால்தான் எல்லோரும் ஒருங்கே இன்புறமுடியும். சங்கீதம் நாதத்துடனும், சப்தங்களுடனும் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டதே தாளத்திலிருந்துதான் என்று சங்கீத நிபுணர்களும் சாஸ்திர ஆதாரமாகக் கூறுகிறார்கள்.

இசையே இல்லாது வெறும் தாளத்தை மட்டும் (இவ்விடத்தில் தாளம், மிருதங்கத்துடன் நாட்டிய ஜெதி வாசித்தல்) ஓசையுண்டாகத் தட்டினாலே மனத்தில் ஒரு எழுச்சி உண்டாகிறது. அந்த ஓசைக்குத் தக்கமாதிரி குழந்தைகள் தம்மையறியாது ஆடவும் ஆரம்பித்துவிடுகின்றன. அதோடு சாஹித்திய இசையும் சேர்ந்து வரும்போது இனிமையான சங்கீத ஆனந்தத்தைக் காண்கிறோம். உயர்தரமான வித்வதாம்சம் பொருந்திய சங்கீதத்தை அந்த நுட்பம் தெரிந்தவர்கள்தான் அனுபவிக்க முடியும். (கீழ்கண்ட பாசுரத்தை பேகடா ராகத்தில் பாடுவது; ஆலாபனை: பிடில் கூட வாசிப்பது.)

மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோரின் சொலில்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளிவிளிவன் வாளா
புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கினிக் கதியென் சொல்லா யென்னையா ளுடையகோவே.

—திருமாலை.

ஆலாபனம் செய்தாலும், தாளமில்லாது பாடல்களை ராகமாலிகையாகப் பாடினாலும் ராக ஞானமும் சாஹித்தியத்தில் ருசியும் உள்

*Published by courtesy of All India Radio, Trichy.

ளவர்கள்தான் அதை அனுபவிக்கமுடியும். ஆனால் அது எல்லோரையும் பரவசமுறச் செய்யாது. மனத்திலும் நிலைத்து நிற்காது. அதே பாடலை (மால்கோஸ் ராகத்தில் ஆதி தாளத்தில் பிடில், புல்லாங்குழல், மிருதங்கம் முதலியவற்றுடன் பாடுவது) தாளத்துடன் இசைத்துப் பாடினால் சுலபமாக எல்லோரையும் தன் பக்கம் இழுத்துக்கொள்ளும். உதாரணமாக பல்லவி ராகத்தை ஒரு வித்வான் ஒரு மணி காலம் பாடும்போதும், பல்லவி ஸ்வரம் பாடும்போதும் சபையில் சலசலவென்று பேச்சும் சப்தமும் உண்டாவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். சில பாட்டிமார்கள் "இதென்ன தொரனன்னவோ! தலைநோவு. நல்லதா நாலு உருப்படி பாடக் கூடாதோ!" என்று சொல்வதை நானே காதாரக் கேட்டிருக்கிறேன். அதேபோல் ஸ்வரம் போடும்போது, "இதென்ன? 'ஸெரிஸா மரிஸா' ன்னு யுத்தம் பண்றானே! இது யாருக்கு வேண்டிருக்கு?" என்றும் கூறுகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் எனக்குப் பழய விஷயம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது காலம்சென்ற சங்கீத வித்வான் பிடாரம் கிருஷ்ணப்பாவை அறியாதார் இருக்கமாட்டார்கள். அவர் அபூர்வமாகப் பாடும் சக்தியுடன், கர்ப்பதானம் பாடுவதில் கைதேர்ந்தவர். (இந்த இடத்தில் அவர் மோஹனம் நன்னுபாலிம்ப ப்ளேட்டை வைக்கவேண்டும்) இம்மாதிரி சபையில் பாடியபோது அதன் மகிமையும் பெருமையும் அறியாத அனேகர் "இதென்ன குலைக்கிறாப் பலே இருக்கே" என்று கேலிசெய்தார்கள். இதே மோகன ராகத்தைப் பாடி "நானேன்ன மாடுவேனோ! ரங்கய்யரங்கா" என்ற தாஸருநாமாவளியைப் பாடியபோது (பாடிக் காட்டுவது) கரகோஷமும் ஆரவாரமும் கூறத்திறமில்லை.

எந்த தேசத்து ராணுவசங்கீதத்திற்கும் தாளம் இன்றியமையாததாய் விளங்குகிறது. எண்சாண் உடம்பிற்கு சிரசு எப்படி ப்ரதானமோ அப்படியே சங்கீதக் கலைக்குத் தாளம் அதிமுக்யமானதாகும். எந்த பாஷையிலுள்ள சங்கீதத்தையும் தாளத்தின் சிறப்பால், பாஷை தெரியாவிடினும் சற்று ரஸிக்கமுடியும். உதாரணமாக பனிகி சிடியா (இசைத்தட்டைப் போடுவது) என்கிற பாட்டை அர்த்தம் தெரியாவிடினும் தாளத்தின் அமைப்புக்காகவும் மெட்டின் விருவிருப்புக்காகவும்பெரிய நாகஸ்வர வித்வான்கள் முதல் வண்டியோட்டுகிறவன், மூட்டைத் தூக்குகிறவன் வரையில் குசாலாகப் பாடுவதைக் கேட்கிறோம்.

தாளத்துடன் இசைத்த சிறிய துக்கடாப் பாட்டுக்கள் பாடினால் பாடகன் த்வனியைக்கூட அடக்கிவிடும்படி 'சபாஷ் சபாஷ்' என்ற சப்தத்துடன் தாளம் போடும் சப்தமும் உண்டாவதைப் பார்க்கிறோம். எத்தகைய மனிதர்களுடைய உள்ளத்தையும் தாளம் பிடித்து இழுக்கிறது. அந்த தனி சக்தி அதற்கு இருக்கிறது. தாளத்திலிருந்தே பலவித உணர்ச்சிகளையும் நாம் அடைகிறோம்.

அம்மன், பிடாரி முதலிய தேவதைகளின் திருநாளுக்கு ஒருவித மான முழக்கம். அந்த ஓசையிலிருந்தே அம்மன் வருகிறது என்று அறிகிறோம். அதேபோல் ஸ்வாமி புறப்பாட்டைத் தாள சப்தத்தினால் அறியும்போது மனத்தில் உத்ஸாகமும் பயபக்தியும் உண்டாகிறது. நாட்டைராகத்தில் மேளத்தை ஆரம்பித்துவிட்டால் பக்த கோஷ்டிகளின் உள்ளத்தில் ஆனந்தமும் ஆவேசமும் உணர்ச்சி மயமாகப் பொங்குகிறது. "அப்பனே! கருணாநிதே! ஆபத்சகாயா! அகிலரக்ஷகா!" என்று துதித்து உள்ளம் உருகிக் கூத்தாடும் பக்த கோஷ்டிகளைக் கண்ணால் பார்க்கிறோம். அதேபோல் கல்யாண வீட்டில் ஓயாது மேளம் வாசித்தாலும்கூட முகூர்த்த சமயத்தில் வாசிக்கும் கெட்டிமேளத்தைக் கேட்கும்போது எத்தகையோருக்கும் உள்ளத்தில் கூறத்திறமற்ற உணர்ச்சியும் ஆனந்தக்கண்ணீரும் வழிந்தோடுகிறதையும், வாத்யாருக்கும் மந்திரம் சொல்ல நாக்குழறுவதையும், பெண்டுகள் 'லக்ஷ்மீ கல்யாணமே' என்று பாட, தொண்டையில் அந்த ஆனந்தத்தின் வேகம் ஒருவிதமான கம்மலைக் கொடுப்பதையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கலாம். அடுத்த விநாடியே மேளக்காரன் "ஆனந்தமானந்தம்" என்று வாசிக்கும்போது உத்ஸாகம் தலைதூக்கி நிற்கிறது. (நாகஸ்வரத்தில் 'ஆனந்தமானந்தம்' வாசிக்கும் இசைத்தட்டை இங்கு போடுவது) நான் அறிந்தமட்டில் இந்த உணர்ச்சிகளை ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுவர், சிறுமியர் உள்பட அனுபவித்திருக்கிறார்கள் என்பதில் ஐயமேயில்லை.

சங்கீத சாஸ்திரம் லவலேசமும் தெரியாத க்ராமாந்திரத்திலுள்ள பாமர ஜனங்கள் தங்களுடைய உல்லாசமான நேரத்தை க்ராமியப் பாட்டுக்கள் பாடியும் ஆடியும் இன்புறுகிறார்களென்பதை நாம் நாளையும் க்ராமத்தில் பார்க்கலாம். அந்த பாட்டில் சாஹித்ய விசேஷமோ, சாஸ்திர லக்ஷணமோ சற்றுமிருக்காது. எனினும் தாரை தம்பட்டை முதலியவைகளுடன் ஆண்களும் பெண்களும் ஒன்றாகக் கூடி தாளத்தின் அபாரமான சக்தியில் லயித்துப்போய் கூத்தாடியவாறு கைகளைக் கொட்டிக்கொண்டு, (கஞ்சீரா, தம்பட்டையுடன் எல்லோரும் கலந்து பாடுவது.)

காதுகுத்திக் கடுக்கனிட்டு நான் வளத்தேன் சாவல் அம்மே
நான் வளத்தேன் சாவல்
நான் வளத்த சாவல்தனை பதிக்கிக்கோண்டவள் ஆரோ?
எங்கள் சாமி சாரங்கதரன் இன்னு சோல்லுவாரோ?
மூக்குக்குத்தி முத்துபோட்டு நான் வளத்தேன் சாவல்
நான் வளத்த சாவல்தனை மறைத்துக்கோண்டவளாரோ!
எங்கள் சாமி சாரங்கதரன் இன்னு சோல்லுவாரோ!

இது ஒரு பாட்டு. இன்னுமொரு பாட்டைக் கேளுங்கள்.

ஓராம் மயிலாட! எம்மே....முருகருந்தானடா!
எம்மே முருகருந்தானடா! அந்தமுருகரும் வெள்ளியரும் பந்துவிளையாட!

என்று பாடியதையும் ஆடியதையும் நான் கண்ணாரக் கண்டு கேட்டிருக்கிறேன். இந்தப் பாடல்களில் சங்கீதமோ சாஹித்யமோ கிடையாது. ஆனால் அவர்களுடையும் சந்தோஷமும் ஆனந்தமும் கூறத்திறமில்லை. அதிகமான கனத்தை இழுப்பவர்கள் தங்களுக்கு ச்ரமமில்லாதிருக்கும் பொருட்டு ஆனந்தமாக "ஏலேலோ ஐலஸா"....என்று பாடிக்கொண்டே இழுக்கிறார்கள். ஏற்றம் இறைக்கும்போதும் ஒரு பாட்டு.

பெண்கள் கைகளின் வளையும் கால் சலங்கையும் சேர்த்து ஒலிக்க கைத்தட்டிக்கொண்டு கும்மியடிப்பதில் முற்றிலும் தாளத்தின் சக்திதான் ப்ரதானமாயிருப்பதைக் கூறவேண்டுமா? (ஸ்திரீகள் கோஷ்டியாகப் பாடுதல்.)

சுட்டும் விழிச்சுடர்தான்—கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக்கரிய விழி—கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப்—புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில்—தெரியும்
நக்ஷத்தி ரங்களடீ!

—பாரதியார்.

சாஹித்யம் எதுவாயினும் தாளத்தின் அழகில் மறைந்துவிடுகிறது. ஒரு பிச்சைக்காரன் தனது ஓட்டைத் தம்பூராவை மீட்டிக்கொண்டு ஒரு கையில் சப்ளாவைத் தட்டிக்கொண்டு,

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின் தடங்கண்ணன் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் திருக் கேதார மெனிரே.

—சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்.

என்ற ஒரு பாட்டை சற்று நன்றாகவும் பாடிவிட்டால் வீட்டிலுள்ள குழந்தைகள்கூட அரிசி கொண்டு போட்டுவிடுகின்றன. வீதியில் திரியும் நாடோடிகளாகிய குருவிக்காரர்கள் தகரக் குவளையில் தாளத்தைப்போட்டுக்கொண்டு "ஓ! ஆயா! ஓ! அப்பீ!....சுணேப்யாரீ! மோகனா!....லல்லா லே"...என்று பாடியவாறு ஆடுவதைப் பார்க்கும்போது ஒருவித உத்ஸாகம் பிறந்து ஜனங்கள் கூடிவிடுவதைப் பார்க்கவில்லையா!

சாஹித்யத்தையும் தாளத்தையும் பிரிக்கமுடியாதவாறு பிணைத்திருக்கும் அபூர்வமானப் பாடல்களும் அனேக மிருக்கின்றன. அவற்றில் முக்கியமாக திருப்புகழ், காவடிச்சிந்து, திருமழிசையாழ்வார் அருளிய திருச்சந்தவிருத்தம் முதலியவைகளைக் குறிப்பிடலாம். உதாரணமாக காவடிச்சிந்தில்,

மூசுவண்டு வாசமண்டு காவின்மோண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே — மைய
லாகவே பேடையுடனே நாடுமே — யலை
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்று மூடுமே — கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

என்ற பாடலும், திருப்புகழில்,

வங்காரமார்பிலணி தாரோடுயர்கோடசைய
கொந்தாரைமாலை குழலாறமோடுதோள்புரள
வண்காதிலோலைகதிர் போலஒளிவீசயிதழ் — மலர்போல

என்ற பாடலும், திருச்சந்தவிருத்தத்தில்,

நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞால மேனமாய்
இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே.

என்ற பாடலுமாகும்.

பாரதியாரின் கவிகளிலும் இம்மாதிரி சந்தத்தில் பல பாடல்கள் இருக்கின்றன. உதாரணமாக "வேடிபடு மண்டத் திடிபல தாளம் போட—வெறும் வெளியிலிரத்தக்களியோடு பூதம் பாட"...நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் நிறைந்த சுடர் மணிப்பூண்..."வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே"....இவைபோல் அனேகமிருக்கின்றன.

கோயிலில் பக்தகோஷ்டிகள்,

ஓடுவார் விழுவா ருகந்தாலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குத் தானென்பார்
பாடு வார்களும் பல்பறை கொட்டநின்று
ஆடுவார்களு மாயிற்றுய்ப் பாடியே. —பெரியாழ்வார்.

என்ற பாசுரத்தை சேவை செய்வதுபோல் பாடினால் அந்த பாசுரத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களும் பக்தியில் ஈடுபட்டவர்களும் ஒருவாறு ஆனந்தமாக அனுபவிக்கலாம். ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா ஆயர்பாடியில் அவதாரம் செய்த உடனே அந்த அபரிமிதமான ஆனந்தத்தை ஆயர்பாடியில் உள்ள கோபிகளும் கோபாலர்களும் கொண்டாடி இன்புற்றுக்களிப்பதாக ஆழ்வார் பாடியிருக்கும் இதே பாட்டை பஜனை பந்தாவில் தாளத்துடன் அமைத்து......பாடுவார்களானால், அர்த்தத்தின் அருமை அறிந்தவர்கள் அறியாதவர்கள் எல்லோருக்கும் ஒரு புதிய உணர்ச்சியையும் சக்தியையும் கொடுத்து இக்கூட்டத்தில் இழுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. (தம்புராஸ்ருதியுடன், கோட்டு, புல்லாங்குழல், மிருதங்கம், கஞ்சிரா, ஜாலரா முதலியவற்றுடன்

கோஷ்டிப்பாட்டு) பஜனையின் முக்யத்வம் பக்தியை ஊட்டுவது. பக்தியைப் பாடல் மூலம் மக்களின் மனத்தில் பதியச் செய்வதற்கும் அவர்களை ஒரு ஆகர்ஷண சக்தியுடன் இழுப்பதற்கும் தாளம் இன்றியமையாத சாதனமாகும். "ஜே ஜே விட்டல்.... ஹரே விட்டல்"...என்று பக்திப் பெருக்கால் பாடுவதைக் கேட்கும் நாஸ்திகனின் உள்ளத்திலும் உணர்ச்சி உண்டாகி அவனை அறியாது "விட்டல் விட்டல்...ஜே ஜே விட்டல்" என்று கூவிவிடுவான். "கோவிந்த கோவிந்த! கோவிந்த கிரிதாரீ! ச்யாம சுந்தர மதன மோகன ப்ருந்தாவன விஹாரி! பஜ கோவிந்த! கோவிந்த! கோவிந்த கிரிதாரீ...ஜே! கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா! கோவிந்தா!" என்று பாடும்போது மயிர் சிலிர்ப்பும் உள்ளுக்குள் ஒருவித பரவசமும் உண்டாகி தம்மை யறியாது "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூறுவதைப் பல பஜனைகளில் பார்க்கிறோமல்லவா! சாஸ்திரப்படி இது இது இந்த தாளம் என்கிற வித்யாஸமே தெரியாதவர்கள் கூட தாளத்தில் லயித்துக் கை கொட்டிப் பரவசமுறச் செய்யும் சிறப்பு ஓர் தனிசக்தி வாய்ந்ததல்லவா! மக்களைத் தன்பால் லயிக்கச் செய்யும் அபாரமான சக்தி வாய்ந்திருப்பதனுல்தான் தாளத்திற்கு லயம் என்ற பெயர் வந்ததுபோலும். தாளத்துடன் இனிமையானதும் கவர்ச்சியானதுமான மெட்டும் சுத்தமான ஸாஹித்யமும் சேர்ந்துவிட்டால் அதில் மக்கள் மதிமயங்கிவிடுவது சகஜந்தானே.

இதனுல் சங்கீதத்தில் தாளத்தைத் தவிர மற்ற அம்சங்கள் உயர்வானது அல்லவென்றோ, மற்றவைகளை நான் விரும்பவில்லையென்றோ நான் கூறவில்லை. சங்கீதத்தில் ஸாஹித்ய அழகையும், மெட்டுக்களின் அமைப்பையும் மற்ற இதர அம்சங்களையும் நான் பரிபூர்ணமாய் விரும்புகிறேன். பஞ்சாமிருதத்திற்குக் கனி எப்படி முக்கியமோ அப்படி சங்கீதத்தில் தாளம் ஒரு முக்கியமானது என்பதால் நான் தாளபத்த சங்கீதத்தை அதிகம் விரும்புகிறேன்.


# சென்னை ரேடியோவில்

**8-7-1940** மாலை 6-5 முதல் 6-30 வரையிலும்



**திங்கட் கிழமை** இரவு 9-45 முதல் 10-30 வரையிலும்

ஸ்ரீமதி. பத்மாக்ஷி பாடுவதைக் கேளுங்கள்.




ஸாஹித்யகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

**22-வது மேளகர்த்தா** **கரஹரப்ரிய.**

ஜன்ய ராகம். ஆபோகி.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஔடவம்.

| ஸ | ரி | க | ம | த | ஸ் |
|---|---|---|---|---|---|
| | சதுர் | சாதாரண | சுத்த | சதுர் | |

அவரோஹணம்—ஔடவம்.

| ஸ் | த | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|
| | சதுர் | சுத்த | சாதாரண | சதுர் | |

இராகம் - ஆபோகி: சதுரஸ்ரஜாதி - த்ரிபுட.

பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ; ; ● | கா மா தா ; தா | தா ; ஸ்ா ;- தா | ஸ்ா தா மா கா |
| | | இ ன வம் ச | ரா மா இ | கி ச ம ய |
| | | | . . | . . |
| 2 | ரீ கா ரீ ● | கா மா தா ; தா | ம த ஸா;- த ஸ | ரி ஸ தா மா கா |
| | மு ர | இ ன வம் ச | ரா மா இ | கி ச ம ய |
| | | | . . . | . . . . . |
| 3 | ரிகமகரீ ● | கா மா தா ; தா | மதஸதஸா-தஸ | ரிகரிஸதஸதம |
| | மு ர | இ ன வம் ச | ரா மா இ | கி ச ம ய |
| | | | . . . | . . . . . . |
| 4 | கமகரிஸரி ● | கா மா தா ; தா | மதஸதஸா-தஸ | ரிகமகரிஸதம |
| | மு ர | இ ன வம் ச | ரா மா இ | கி ச ம ய |
| | கமகரிஸா ● | ரி க மா க ரி ரீ ஸா | தா, ஸா , - ரிக | மா தா ; ஸ்ா |
| | மு ர | க னு லா ர | ஜூ சி கா | வ வைய் ய |
| | . . . . | | | |
| | ரிகரிஸதம ● | | | |
| | ரா ம | | | |

## அநுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ; ; ; | ● | மா தா ஸா ; ரீ | ரீ ; ; - ஸ ரி | கா ரி க மா கா |
| | | | த ன வா ட | னி த | ல ச க |
| 2 | ரீ கரிஸத | ● | மா தா ஸா ; ரீ | ஸரிகரிகா - ஸரி | க ரி ரி க மா கா |
| | னும்டே | | த ன வா ட | னி த | ல ச க |
| 1 | ரீ ஸா ; | ● | ரீ கா ரீ ; ஸா | தா, ஸா, - ரீ | கா ரீ ஸா தா |
| | னும்டே | | நன்னு ப்ரோ சு | வா ரு நின் | னு வி ட சி |
| 2 | மாகமதஸ் | ● | ரீ கா ரீ ; ஸா | தா, ஸா, - ரி க | மககரிரிஸஸத |
| | லே ரு | | நன்னு ப்ரோ சு | வா ரு நின் | னுவி ட சி |
| | தமகமகரி | ● | | | |
| | லே ரு | | | | |

## சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ; ; ; | ● | தா தா தா ; தா | தா, ஸ்ா, - த ஸ் | தா மா ; கா |
| | | | மு னு நின் னு | வே டி மொ | ர பெட் டி |
| | ரிகமகரீ | ● | ஸ ரி கா ரீ ; ஸா | தா, ஸா, - ரி க | மா தா ; தா |
| | ன | | வ னி த ப்ர | க்லாத கொ | னி யா டே |
| 1 | த ஸ தா ; | ● | மா தா ஸா ; ரீ | ரீ , ரீ , - ஸ ரி | கா ரி க மா கா |
| | த்ரு வ | | க னு டை ன | வி பீ ஷ | ணு னி கா |
| 2 | ரீ க ரி ஸ த | ● | மா தா ஸா ; ரீ | ஸரிகரிகா - ஸரி | க ரி ரி க மா கா |
| | சின | | க னு டை ன | வி பீ ஷ | ணு னி கா |
| 3 | ரீ க ரி ஸ த | ● | மா தா ஸா ; ரீ | ஸரிகரிகா - ஸரி | க ரி ரி க மா கா |
| | சின | | க னு டை ன | வி பீ ஷ | ணு னி கா |
| 1 | ரீ ஸா ; | ● | ரீ கா ரீ ; ஸா | தா , ஸா, - ரீ | கா ரீ ஸா தா |
| | சி ன | | வ ன ஜா க்ஷா | கோ த வல் | ல ப வே க |
| 2 | மாகமதஸ | ● | ரீ கா ரீ ; ஸா | தா , ஸா , -ரிக | மககரிரிஸ ஸத |
| | ரா ரா | | வ ன ஜா க்ஷா | கோ தா வல் | ல ப வே க |
| | தமகமகரி | ● | | | |
| | ரா ரா | | | | |

## முக்தாயிஸ்வரம்

| | | | | |
|---|---|---|---|---|
| | ● | ஸா,-ரிகம - தஸரிஸ | தஸதமகரி- ஸரி, | கமகரிஸ - ரிக |
| ம க மா ; | ● | மகரிஸ-ரிகமத -ஸரி, | கரிஸ -தஸரி -க | ரிஸதம-ரிஸதம |
| கஸ்தமகரி | ● | | | |

ஸ்ரீ

# சந்தோஷ மலர்

## 1

"ஆம்! ஆண்டவனின் அருளால் இந்த அழகிய உலகமே ஓர் சந்தோஷ மலராகவே என் மனத்திற்குத் தோன்றுகிறது. அதுவே இன்பம். அதுவே எனக்குப் பேரானந்தத்தை யளிக்கிறது. இதோ! ஒரு கவி வருகிறது. பாடுகிறேன். கேளு... ரங்கநாதா! கேளு! கேளு!" என்று ஒரு அழகிய வீர வாலிபன் தன் சிநேகிதனை நோக்கிச் சொன்னான். அவன் சிரித்துக் கொண்டே "ஏண்டா மதுசூதனா! நீ என்னவோ ஓயாது வெறி பிடித்தவன்போல் "கவி! கவி!" என்று பிதற்றுகிறாய்; எனக்கென்னவோ அதன் விஷயமே தெரியவில்லை. நீ இம்மாதிரி வீண்பொழுது போக்குவதை உன் பெற்றோர்கள் வெறுக்கிறார்களே! நீ அதை அறிவாயா! என்ன கவி வேண்டியிருக்கு? எழுந்து வா! சற்று நேரம் பந்தாடிவிட்டு வரலாம். உம்...சொல்வதைக்கேளு. எழுந்திரு. வாத்தியாருக்குக்கூட உன்மீது அசாத்ய கோபம் தெரியுமா?" என்றான்.

மதுசூதனன்:—(சற்றும் கோபப்படாமலும் சாந்தத்தை இழக்காமலும் சிரித்துக்கொண்டே பேசத்தொடங்கி) ரங்கநாத்! உனக்கு மட்டும் இந்த இன்பத்தின் உணர்ச்சி ஏன் தெரியவில்லை? என் பெற்றோர்களுக்குத்தான் நான் பெரிய உத்தியோகம் செய்து பார்க்கவேண்டும் என்கிற பிரேமை...உனக்குமா அந்தப் பயித்தியம்?...ரங்கா!...இதோ பாரு. பந்தாட்டமெல்லாம் உனக்குத்தான் இன்பத்தை யளிக்கும். எனக்கு அது வெறும் விளையாட்டாகக்கூட சில சமயம் தோன்றுவதில்லை. அகண்டாகாரமான உலகத்தையே பந்தாகச் சுருட்டி விழுங்கிய பரந்தாமனின் புகழைப் பாடி இன்புறுவதைவிட மற்றெல்லாம் ஒரு த்ருணமாக எனக்குத் தோன்றுகிறது.

பூவினழகைத் தன்பால் பொருத்திக் கொண்டான்
பூவுலகையும் தன்புந்தியில் புகுத்திக் கொண்டான்.

என்று மோகன ராகத்தில் பாடினன்.

ரங்கநாதன்:—டேடேடேய்! போதும் நிறுத்துடா! உன் கவியின் ருசியை நீயே அனுபவித்துக்கொள்ளு. பூவின் அழகை நான் நந்தவனத்தில் ஆனந்தமாய் பார்க்கிறேன், அதைவிடவா வேறு அழகு?

மது:—சீச்சீ! முட்டாள்தனமாகப் பேசாதே. எத்தனை விதமான அழகிய புஷ்பங்கள் உண்டோ, அத்தனையும் ஒருங்கு சேர்ந்து அந்த பரந்தாமனிடமே பிரகாசிப்பதை நீ அறியவில்லையா! பேயாழ்வார் பாடியிருக்கும் அழகைப் பாரேன்

"கண்ணும் கமலம் கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும் மற்றவையே—எண்ணின்
கருமா முகில்வண்ணன் கார்க்கடல் நீர்வண்ணன்
திருமாமணி வண்ணன் தேசு."

பகவானின் ஒவ்வொரு அங்கமும் தாமரையின் பிரதிபிம்பமாக உனக்குத் தோன்றவில்லையா?

ரங்:—என்ன வர்ணனையோப்பா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உங்க அண்ணன் சொல்வதுபோல் உனக்கு நாளைக்குநாள் பயித்தியம் முற்றிக்கொண்டுதான் வருகிறது. இல்லாவிட்டால் படிப்பை அடியோடு மறந்து சதா சர்வ காலமும் பித்துக்குளி போல் இப்படிப் பிதற்றுவாயா! கடவுளைப் பணியவேண்டும். பக்தி செய்யவேண்டும். எல்லாம் வாஸ்தவந்தான். அதற்காக இத்தனை சிறிய பிராயத்தில் நீ கவனிக்கவேண்டிய விஷயங்களை அடியோடு மறந்து இப்படி விரக்தி கொண்ட சன்யாசிபோலிருக்கலாமா! படிக்கவேண்டிய காலத்தில் படிக்காமல் தாந்தோனியாய் எப்போ பார்த்தாலும் ஸரிகமபதநிஸ வுடன் யுத்தம் செய்துகொண்டிருந்தால் இக்காலத்தில் அந்த ஸரிகமபதநிஸ சோறு போட்டுவிடுமா! சொல்லு பார்க்கலாம்.

மது:—ஏன் போடாது? என் தலையில் ப்ரம்மன் அந்ததொழிலை எழுதியிருந்தால் அதுதானே சோறுபோட்டுத் தீரவேண்டும். அதை நீ கேவலமாக நினைக்கிறுயா! நாம் தினமும் போற்றிப் பணியும் மூன்று தேவிகளில் ஒருத்தியாகிய சரஸ்வதியின் ப்ரஸாதத்தை நீ தெய்வதாம்சம் பொருந்திய வரப்ரஸாதமாக நினைக்கவில்லையா!

அதன் மகிமை கூட உன் மூளையில் ஏறவில்லையா?...

ரங்க:—இதோ பாரு! இந்தமாதிரி விஷயமெல்லாம் என்னிடம் வீண் தர்க்கம் செய்யாதே! சங்கீதத்தைச் சில மணிநேரம் கச்சேரி, பிளேட்டுகள், சினிமா, நாடகம் முதலியவற்றில் கேட்டு ஆனந்தப்படுவது சகஜம். அதை விட்டு சதா சர்வகாலமும் நாமே பயித்தியம் பிடித்து ஆடவேண்டுமென்கிறாயா! அது எனக்கு வேண்டாம். இந்த வருஷம் எனக்கு முதல் வகுப்பில் பரீக்ஷை பாஸாகுமா என்று நான் ஏங்கிக் கிடக்கிறேன். நீயோ சென்ற வருஷமும் முட்டி போட்டுவிட்டாய். இந்த வருஷமும் ஸைபர்தான் வாங்குவாய் என்று வாத்தியார் சொல்கிறார். உன் தாய் தகப்பனாரோ என்னைப் பிச்சுகிறார்கள். நான் எத்தனை சொன்னாலும் உனக்கு ஏறவே இல்லை. சங்கீதமும் பாடு. வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதொன்றிலேயே முழு நேரத்தையும் செலவு செய்தால் நாலு காசு சம்பாதிக்கவும் கல்யாணம் செய்துகொண்டு குடும்ப பாரத்தை வகிக்கவும் சக்தி வேண்டாமா!

மது:—உன் வார்த்தைக்கே வருகிறேன். முன் காலத்திலிருந்த பெரிய வித்வான்களெல்லாம் பிழைக்காமல் செத்துவிட்டார்களா! அவர்களுடைய மதிப்பும் கண்ணியமும் அழியாப் புகழும் இன்னமும் பிரகாசிப்பதை நீ மறந்துவிட்டாயா?...என்று பேசும்போது மதுசூதனனின் தகப்பனார் அங்கு வந்தார்.

அவர் சற்று கோபத்துடனேயே பேசத் தொடங்கி, "ஐயோ! தலைவிதியே! எத்தனை சொன்னாலும் புத்தியில் உரைக்காத உன்னிடம் முட்டிக்கொள்வதைவிட கருங்கல் சுவற்றில் முட்டிக்கொள்ளலாம். அந்த காலத்து வித்வான்களின் புகழ் அழியாததற்குக் காரணம் அக் காலத்தில் வித்வான்களின் யோக்யதைகளை அறிந்து அவர்களை ஆதரிக்கும் ரஸிகர்களும், சபாக்களும், சமஸ்தானங்களும் ஏராளமாயிருந்தன. எத்தனையோ உயர்ந்த முறையில் ஆதரித்தார்கள். வித்வான்களும் விருத்திக்கு வந்தார்கள். அந்த காலந்தான் நாளுக்கு நாள் மறைந்துபோய்க்கொண்டிருக்கிறதே. இனிமேல் நீ பூத்து முளைத்து வருவதற்குள் இன்னும் எத்தனை மாறுதல்களுடன் உலகம் காக்ஷியளிக்கப்போகிறதோ! கேவலம் இப்படி பித்துக்குளியாயிருந்தால் நீ படித்துக் கிழித்துவிடுவாய். உன் பாஸூம் டபாஸ்தான். ரங்கூ! நீ பாஸ் செய்துவிட்டாய். இந்த கழுதை அதே இடத்தை விட்டுப் போக மனமே வரவில்லை. அப்படியே பூஷணிக்காய்

போன்ற மார்க்குடன் உட்கார்ந்துவிட்டது. அவனுக்கேதாவது வெட்கமிருக்கிறதா பாரு'' என்று வெறுப்பும் அலக்ஷியமும் கலந்தத் தொனியில் கூறினர்.

தனக்குப் பாஸாகிவிட்டதென்றதைக் கேட்டதும் ரங்கநாத னின் சந்தோஷம் கரைபுரண்டு விட்டது. முக மலர்ச்சியின் சோபையைக் கண்டு மதுசூதனனின் தகப்பனராகிய திருவேங்கடம் ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் வருத்தமும் அடைந்தார். ரங்க நாதனின் முதுகில் தட்டிக்கொடுத்து, "ரங்கநாத்! உனக்கு சந்தோ ஷப் பாராட்டுத் தெரிவிக்கிறேன். படிப்பின்மீது அக்கரையாய் இரவு பகல் நேரத்தை வீணக்காது படித்ததனல் தேறிவிட்டாய். எங்கள் பிராரப்த கர்மம் இதோ இம்மாதிரி ஒரு உணர்ச்சி வெள்ள ஜடத்தை வைத்துக்கொண்டு அழுகிருேம்.

ஏதடா! பரீக்ஷையில் ஸுன்னம் விழுந்துவிட்டதே என்கிற வருத்தமோ, அவமானமோ ஏதாவது அவனுக்கிருக்கிறதா, பாரேன். இம்மாதிரி இவன் தன்னனே பாட்டுப்பாடித் திரிந்துகொண்டிருந் தால் இவன் உருப்படுவதெப்படி? எத்தனை தரந்தான் சொல்வது?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூறினர்.

பரீக்ஷை தேருததனல் மதுசூதனனுக்குச் சற்றும் வருத்தமே தோன்றவில்லை. அவன் முகம் எப்போதும் போல் சந்தோஷமும் சாந்தமும் நிரம்பிய சோபையுடன் விளங்கியது. அவன் தைரியமா கவே தகப்பனரை நோக்கி, "அப்பா! நீங்களேன் கவலைப்படுகி றீர்கள்? இந்த பரீக்ஷையில் தேறுவதோ, தோற்பதோ பற்றி எனக் குச் சற்றும் கவலையே இல்லையப்பா! பகவானிடம் பாவம், புண்ணி யம் என்கிற பரீக்ஷையில் தேறிவிட்டால் அதுதான் சார்த்தகம். இதில் எனக்குச் சற்றும் விசனமே இல்லை'' என்று அலக்ஷ்ய மாகக் கூறினன்.

இதைக்கேட்ட தகப்பனருக்கு கோபம் சீறிக்கொண்டு வந்து விட்டது. "என்ன சொன்னய்! சார்த்தகமா! அடபாவி! நீ படித்து பெரிய பதவிக்கு வரவேண்டுமென்கிற ஆசையால் ஏருத படி எல் லாம் ஏறி, நுழையாத வீடெல்லாம் நுழைந்து யார் யார் காலிலோ விழுந்து பல்லிளித்து கெஞ்சிக்கூத்தாடி உனக்கு உபகாரச் சம்பளத் திற்கு ஏற்பாடு செய்வதற்கு நான் பட்ட கஷ்டமும் என் கால் தேய்ந்த தேய்ப்பும் எனக்கல்லவா தெரியும். கொஞ்சங்கூட வருத்த மறியாது இப்படிப் பேசி என் மனத்தை வருத்துகிருயே! நான்

பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாகிவிட்டதே. இனி மறுபடியும் உனக்கு உபகாரச் சம்பளம் எப்படி கிடைக்கும்? உன்னை எப்படி படிக்கவைப்பது?'' என்று வயிறெரிந்து திட்டினார்.

ரங்கநாதன் தனது சந்தோஷச் செய்தியை வீட்டில் தெரிவிக்க ஒரு துள்ளு துள்ளிக்கொண்டே ஓடினான். அவன் முகத்திலிருந்த உணர்ச்சியைக் கூறத்திறமில்லை.

## 2

அவன் முகத்திலிருந்த உணர்ச்சியைக் கூறத்திறமில்லை. ஒரு துள்ளு துள்ளிக்கொண்டே ஓடினான். "லக்ஷ்மீ! லக்ஷ்மீ! இங்கு வா! உங்க அழகான அண்ணன் சமாச்சாரம் நான் சொல்லியதுபோலவே சாயம் வெளுத்துவிட்டது. பெரிய உருண்டையான உலகத்தைப்போல் மார்க்கு வாங்கிவிட்டான். அங்கு உங்கப்பாவும் அவனும் யுத்தம் செய்கிறார்கள். அந்த ஆத்மஞானியாகிய பாடகர் வேதாந்தம் பேசுகிறார். உங்கப்பா வயிறெரிந்து கத்துகிறார். இனிமேல் இவன் போடும் தாளம் சரியான அட்ட தாளமாகவே போடலாம்'' என்று லக்ஷ்மியின் கணவனாகிய கிட்டு தன் மனைவியிடம் தெரிவித்தான்.

இதைக்கேட்ட லக்ஷ்மி அலக்ஷியமும் வெறுப்பும் கலந்த பார்வையுடன் கையைக்கொட்டிச் சிரித்துக்கொண்டே "அடடா! அப்பவே சொல்லியிருந்தால் ஹாரத்தி கரைத்து அண்ணனுக்கு மங்களகரமாய் சுற்றி அவன் தலைமேலேயே கொட்டியிருப்பேன்... உம்...கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு? எந்த நேரமும் தரான்ன என்று இழுத்துக்கொண்டிருந்தால் இதிலும் இழுக்கவேண்டியது தானே. இதிலென்ன அதிசயம்?...அம்மாவுக்குத்தான் பாவம் கஷ்டம்'' என்று இழுக்கும்போது, அவள் தாயாராகிய ராஜம்மாள் அதைக் கேட்டுக்கொண்டே வந்துவிட்டாள்.

"உம்....நான் பிறந்த சவரணைக்கு கஷ்டமென்னடியம்மா! ஆதிகாலத்தில் நான் பட்ட சிறுமையைவிடவா இனிமேல் இருக்கிறது? "பிள்ளையில்லாத கொட்டு மலடு, மூதேவி'' என்றெல்லாம் உங்க பாட்டியும் அத்தையும் கூறியது ஒன்று இரண்டா? ஊரார் ஏசியதும் பேசியதும் கொஞ்சமா, நஞ்சமா? வெளியில் தலைகாட்ட

யோக்கியதை உண்டா! சதா சர்வகாலமும் அழுது அழுது கண்ணே அவிந்துவிடும்போலாகிவிட்டது.

உங்கப்பாவுக்கு வேறு கல்யாணம் செய்வதற்குப் பெண்ணும் பார்த்துவிட்டார்கள். அந்த சமயம் எனக்கு எப்படித்தான் இருக்குமென்று நீயே யோசித்துப் பாரு. ஏதோ, யார் செய்த புண்ணியமோ, உங்கப்பாவின் மனது மட்டும் மாறவில்லை. "இங்கு இருக்கும் ஆஸ்தி என்ன பாழாய்ப்போகிறதா?...இதற்காக ஒரு பெண்ணை துரோகம் செய்துவிட்டு அவள் வயிறெரிய இன்னொரு கல்யாணத்தைச் செய்துவிட்டால்மட்டும் குழந்தை பிறந்துவிடுமா! அவளும் இப்படி நின்றுவிட்டால் மீண்டும் கல்யாணம் செய்வதா! தசரதர்போல் தினம் கல்யாணமாப்பிள்ளையாகவே இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா! ஏதோ, அதிருஷ்டமிருந்தால் பிறக்கிறது; இல்லாவிட்டால் போகிறது. இதற்காக நான் மறுமணம் செய்து கொள்ளமாட்டேன்" என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார்.

என் பங்கில் கடவுள் இருந்தார் என்று நான் அளப்பரிய சந்தோஷமடைந்தேன். ஆனால் அத்தனைக் கத்தனை உங்கபாட்டியிடமும் அத்தையிடமும் கேட்ட வார்த்தைகள் கணக்கு வழக்கில்லை. "அவனை மயக்கிக் குலுக்கி எங்கள் வம்சம் விருத்தியாகவிடாது குட்டிச் சுவரடித்துவிட்டாள் நீலி. தான் தான் கொட்டு மலடு, தடிமரம்போல் நிற்கிறதென்றால் வேறுயாரையாவது மணந்து சந்தான விருத்தி செய்து பார்க்கக்கூடாதா! ஊரில் யார் யாரோ சாகிறார்கள். இந்தப் பீடைக்குச் சாவும் வரவில்லையே?" என்றெல்லாம் விடிந்தால் மீண்டும் படுக்கும் வரையில் பெரிய அர்ச்சனை நடக்கும்.

லக்ஷ் :—எம்மா! நிஜமாகவாம்மா இப்படி எல்லாம் சொன்னார்கள்? ஒரு பெண்ணை நிர்த்தாக்ஷிண்யமாய் வயிறெரியச் செய்வதற்கு அவர்களுக்கு எப்படி மனந்துணிந்ததம்மா!

ராஜம் :—ஐயோ! ராமா! இதைவிட இன்னும் கொடுமைகளை நான் அனுபவித்திருக்கிறேனே! என்னை விஷம் கொடுத்துக்கூடக் கொல்லமுயன்றார்கள். இத்தனைக்கும் சொத்தாவது ஏதேனும் உண்டா! ஒன்றுமில்லை. எங்க மாமனார் ஜமீந்தார் சமஸ்தானத்தில் ஏதோ வேலையிலிருந்தார்.

லக்ஷ் :—ஐயையோ! விஷம் வைத்துக் கொல்லத்துணிந்தார்களா! அவர்கள் மனிதர்கள்தானா அல்லது ராக்ஷஸர்களா! அப்பா இதற்கெல்லாம் பேசாமலா இருந்தார்?

ராஜம் :—அவர் பேசாமலிருந்தால் நான் என்றோ செத்துச் சாம்பலாகி இருப்பேன். அவர்களுடைய அக்ரமங்கள் முற்றும் தெரிந்து வருந்துவார். என்னைப் பொறுத்துக்கொள்ளும்படியும் வேண்டுவார். நான் இந்த கொடுமைகள் தாளாது தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்துவிட்டேன். அதையறிந்த அவர் என்னைப் பலவகைகளிலும் தேற்றி நான் தற்கொலை செய்துகொள்வதில்லை என்று ப்ரமாணம் வாங்கிக்கொண்டார். அவருடைய முக மலர்ச்சிக்காக நான் சகலத்தையும் பொறுத்துக்கொண்டிருந்தேன்.

விதி யாரைவிட்டது! உன் சித்தப்பாவுக்குக் கல்யாணமாகி உன் சித்தி வீட்டிற்கு வந்ததுமே குழந்தைகளைப் பெறவாரம்பித்தாள். நான்கைந்து குழந்தைகள் பிறந்துவிட்டன. என்னுடைய கஷ்டமும் அதிகரித்துவிட்டது. எத்தனை மந்திரம், எத்தனை ரக்ஷைகள் கட்டினார்கள்? எவ்வளவு விருதமனுஷ்டித்தார்கள்? அப்பப்ப சொல்லி முடியாது.

சேது, காசி, முதலிய ஊர்களும் பாக்கியில்லை. அரசமரப்ரதக்ஷணம், நாகப்ரதிஷ்டை, சஷ்டி வ்ருதம்...ராமராமா! சொல்லமுடியாது. ஆட்டிவைத்தக் கூத்திற்கெல்லாம் ஆளாக நின்றேன். வருஷங்களோ ஓடிக்கொண்டே இருந்தன. கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து கொட்டு மலடு, என்ற பட்டத்தை ஸ்தாபித்துவிட்டார்கள்.

லக்ஷ் :—உனக்கா?...

ராஜம் :—எனக்குத்தான். அப்போது அப்படித்தானே இருந்தேன். கண்டபேரும் கண்டமாதிரி சொல்லும் சங்கடத்தைச் சகிக்காது இரவு பகல் புலம்பினேன்...'கடவுளின் சோதனை இன்னும் என்னென்ன இருக்கிறதோ!' என்று நிமிடத்திற்கு நிமிடம் எண்ணி பயந்தேன்.

வீட்டில் ஒரு கல்யாணம் காக்ஷி வந்தால் 'இந்த கொட்டு, மலடு கையால் பூச்சூட்டவேண்டாம். தலை பின்னவேண்டாம். கூரைத்தட்டு எடுக்கவேண்டாம். ஆலத்தி எடுக்கவேண்டாம். ஏதாவது எடுபிடி காரியம் செய்யச்சொல்லுங்கள்" என்றெல்லாம் ஏளனம் செய்து பேசும்போது என் இதயம் அப்படியே உடைந்துவிடும்போலாய்விட்டது.

லக்ஷ்:—அம்மா! இதையெல்லாம் கேட்கும்போதே எனக்கு துக்கம் வருகிறதே! நீ எப்படியம்மா இத்தனைக் கொடுமைகளைச் சகித்தாய்?

ராஜ :—என் தலையெழுத்தால் சகித்தேன். சகிக்காவிட்டால் விடுமா! கல்யாண காலங்களில் நானே வெளியில் வராது ஏதோ காரியம் செய்வதாக பாவனை பண்ணிக்கொண்டு உள்ளேயே இருந்துவிடுவேன். சில சமயம் உடம்பு சரியில்லை என்று கூறிப் போகாமலேயே இருந்துவிடுவேன். இம்மாதிரி கஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டிருக்கையிலும் உங்கப்பாவுக்குப் பெண் பார்ப்பதை விடவில்லை.

இந்த ஆபத்தைத் தடுப்பதற்காகவே அப்பா சிலருடன் கலந்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்து அக் காரியத்தைச் சாதித்தும் விட்டார்.

லக்ஷ்:—(பதைப்புடன்) என்ன காரியம் அது?...

ராஜ :—அதுதான் தெரியவில்லையா! உங்க சித்தப்பா பிள்ளை மதுசூதனனை உங்கப்பா ஸ்வீகாரம் செய்துகொண்டுவிட்டார்.

லக்ஷ் :—ஓகோ! இத்தனை உபத்திரவத்திற்குப் பிறகு ஸ்வீகாரம் செய்துகொண்டீர்களா! இதுவரை எனக்குத் தெரியாது....

ராஜ :—நீ சிறுமி உனக்கெப்படியம்மா தெரியும். ஸ்வீகாரம் செய்துகொண்ட மூன்றுவது வருஷம் ஊரே அதிசயிக்கும்படி நீ பிறந்துவிட்டாய். அதோடு என் கஷ்டமும் நிவர்த்தியாகிவிட்டது. ஆனால் என்னை இத்தனை பாடுபடுத்தி வைத்த உங்க அத்தையும் பாட்டியும்தான் அதிக நாள் இருந்து சந்தோஷிக்காது போய்விட்டார்கள். கை நீட்டி வாங்கிய பிறகு நீ பிறந்ததை முதலிலேயே கடவுள் உன்னைக் காட்டி இருந்தால் இந்த கஷ்டம் வருமா! இவ்வளவு பாடுபட்டும் அந்தப் பிள்ளை உருப்படமாட்டான்போலிருக்கிறது. சதா சர்வகாலமும் பாட்டும் கூத்துமாய் சோதாப் பயலைப் போலிருப்பதைப் பார்த்தால் நாம் ஏன் ஸ்வீகாரம் செய்துகொண்டோம் என்று வருத்தமாயிருக்கிறது. என்ன செய்வது?

கிட்டு :—எத்தனை செய்தும் விழலுக்கிறைத்த நீர்தான். பையனை அனியாயமாய்க் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்ட தாயும், பயித்தியக்காரனைப் பாடிக்கொண்டு பிச்சை எடுத்துத் திரியத்தான் வைத்துவிட்டார்கள் என்றும் அவனுடைய அண்ணனும், தாய் தகப்பனும் சதா திட்டுவது கொஞ்ச நஞ்சமில்லை.

லக்ஷ் :—விதியை விலைகொடுத்து வாங்கியதுபோல் அவனை வாங்கிக்கொண்டீர்கள். இனிமேல் என்ன செய்யப்போகிறீர்கள்? பாஸ்தான் டபாஸாகிவிட்டதே.

ராஜம் :—என்ன செய்வதோம்மா! எனக்கொன்றுமே புரிய வில்லை. எப்படியாவது ஒரு கல்யாணத்தைச் செய்துவிட்டால் சற்று வழியுடன் குடும்பம் நடத்துவானே என்னமோவென்று தோன்றுகிறது.

கிட்டு :—போதுமே லக்ஷணம். இந்த பித்துக்குளிக்கு யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? பையனுக்கு என்ன யோக்யதை என்று யாரேனும் கேட்டால், தன்னுடைய பாட்டுபாடி கரிஸாமரிஸா யுத்தம் பண்ணுவான். கவிராயக் காகாஸுரன்போல் கவிபாடுவான். படிப்பு பூஜ்யந்தான் என்று சொன்னால் பெண்ணைப் பெற்றவர்கள் தூக்கிக்கொடுத்துவிடமாட்டார்களா! நேற்று ஒரு சங்கீத வித் வான் சாப்பிட சாதமில்லை என்றும், பிழைப்புக்கே மிகவும் கஷ்ட மாயிருக்கிறதென்றும் எங்கேயாவது பாட்டு சொல்லிக்கொடுக்கும் இடம் கிடைத்தால் மாதம் 5, 10 கொடுத்தால்கூட போதும். கஞ்சியாவது காய்ச்சிக் குடிக்கலாமென்றும் ஏதாவது சிபார்சு செய்யவேண்டுமென்றும் வக்கீல் ராமசந்திர ஐயரிடம் வந்து கெஞ்சிக் கண்ணீர்விட்டார் பாவம்.

அவரது பரிதாபத்தைக் கண்ட எனக்கும் வருத்தமாயிருந்தது. இத்தனைக்கும் அவருக்கு சங்கீதத் துறையில் விருத்தியாகவேண்டு மென்றே முதலிலிருந்து சாஸ்திர பத்தியுடன் பழக்கியிருக்கிறார்க ளாம். உலகம் அப்படியிருக்கிறது. இந்த மூட்டைப்பூச்சிக்கு சமஸ் தானத்தில்தான் உத்தியோகம் கொடுத்துவிடுவார்கள் — என்று அலக்ஷியமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், மதுசூதனன் சந்தோ ஷத்துடன் பாடிக்கொண்டிருக்கும் ராகம் காதில் கேட்டதும் ராஜத் தைத் தவிர மற்ற இருவரும் கொல்லென்று கைகொட்டிச் சிரித் தார்கள். இச்சிரிப்பின் பயங்கர எதிரொலி அந்த அருமையான சங்கீதநாதத்தை விழுங்கி ஏப்பம் விட்டது.

பொன்விழா நாவல் **ஆத்மசக்தி** விலை ரூ. 1/4.

பலவித வர்ணங்களில் 11 ஆப்டோன் படங்களுடன் கூடிய இரண்டாம் பதிப்பு. முன்பண மனுப்பி, தபாற்செலவின்றிப் பெற் றுக்கொள்ளவும்.

வி. பி. கிடையாது.

# 3

கொல்லென்று கைகொட்டிச் சிரித்தார்கள். அச்சிரிப்பின் பயங்கர எதிரொலி அந்த அருமையான சங்கீத நாதத்தை விழுங்கி ஏப்பம் விட்டது. தன்போக்காக இன்பமய மாகப் பாடிக்கொண்டிருந்த மதுசூதனன் இந்தப் பேரிடி முழக்கம் போன்ற சிரிப்பைக் கேட்ட பிறகே திரும்பிப் பார்த்தான்.

அவனுடன் படிக்கும் மாணவர்களில் சிலர் தாம் பரீக்ஷையில் தேறிய சந்தோஷத்தினுல் பொங்கிப் பூரித்துப்போய் மதுசூதனன் பட்டாஸ் வெடித்ததைக் கேட்டு அலக்ஷியத்துடன் சிரித்தபடியே "டேய் டி. எம்! உன் பாட்டே உன்னை முட்டிப் போடச் செய்தது. (மதுசூதனின் தகப்பனுர் பெயர் திருவேங்கடமாகையால், அந்த பெயரின் இனீஷலும் மதுசூதனன் என்பதன் சுருக்கமாய் எம். என் றதையும் சேர்த்து நவநாகரிகமாய் T.M. என்றுதான் பள்ளிக்கூடத் திலும் மற்ற இடங்களிலும் கூப்பிடுவது வழக்கம்.) வாத்தியார் எத் தனை சொல்லியும் கேட்கவில்லை. இன்னமும் பாட்டுப் பாடிக் கொண்டே கிடக்கிருயே! உனக்கு விசனமாயில்லை? உன்னைப் போல் டபாஸ் வெடித்துவிட்ட மணி, பிச்சு, சுந்து, ராமு முதலிய வர்கள் மூண்டச்சிபோல் அழுதுகொண்டே உள்ளே அடைபட்டுக் கிடக்கிருர்கள். நீ ஜோராய் கமாஸ் ராகத்தைத் தமாஷாய் இழுக் கிருயே!...சே...நிறுத்துடா!" என்று ச்வதந்திரமும் அலக்ஷியமும் கலந்து கூறினுர்கள்.

"பிறவியிலேயே அபாரமான சாந்தத்தையுடைய மதுசூதனன். "ஏண்டாப்பா! எதற்காக அழவேண்டும்? மூலையில் படுக்கவேண்டும்? மக்கள் மனிதர்கள் செத்தாலுங்கூட "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?" என்கிற பழமொழி இருக் கிறது. இந்தப் பிரமாத பரீக்ஷை போய்விட்டால் அடுத்த தரம் அதைக் காணமுடியும்; தேறிவிடலாம். அதற்கு ஏன் அழவேண்டும்? எனக்கு விசனமே இல்லை. நான் அழவும் தயாராயில்லை.

மாணவன் :—டேய்! நீ பேமானிடா! உனக்கு உடம்பில் சூடு, சொரணை, மானம், வெட்கம் ஒன்றுமே கிடையாதா! நானுயிருந் தால் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிடுவேன். மணிகூட அப்படிச் செய்துவிடுவானே என்று பயமாகவே இருக்கிறது.

மது :—என்ன! மணிக்கு அத்தனை கோழைத்தனமா? சீச்சீ...

இப்பவே நான் போய் பார்க்கிறேன்—என்று கூறிக்கொண்டே எழுந்து ஓடினன்.

இரண்டு மூன்று தெருவுகளுக்குப் பக்கத்தில் மணியின் வீடு இருப்பதால் சில நிமிஷங்களில் போய்ச் சேர்ந்தான். மணியின் வீட்டு வாசபப்பக்கத்து அறைதான் மணி படிக்கும் அறை. அது நல்ல நாகரீக முறையில் அலங்காரத்துடன் பிரகாசிக்கும்; வாசப் பக்கத்து ஜன்னல் கதவு எப்போதும் திறந்திருக்கும். அன்று ஜன்னல்கள் அடைத்திருந்தன. மதுசூதனன் வழக்கம்போல் உள்ளே சென்றான். மணி பரீக்ஷை தோற்றுவிட்ட அவமானத்தினல் குன்றிப்போய் படுத்திருந்தான். அவனைக்கண்ட மதுசூதனன் வியப்புற்று, "மணீ! மணீ! இதோ பாரு. எழுந்திரு. இதென்ன படுக்கை, இதென்ன அழுகை, நீ ஆண்பிள்ளையல்ல? இந்ததரம் தோற்றுவிட்டால் அடுத்ததரம் பாஸ் செய்துவிடுகிறாய். இதற்காக பெண்களைப்போல் இம்மாதிரியா அழுவார்கள்? சீச்சி...எழுந்து வாடா! கோயிலுக்குப் போய்வரலாம்; இல்லாவிட்டால் பாட்டுக் கச்சேரிக்குப் போகலாம் வா!" என்று கூறியபடியே கையைப் பிடித்து இழுத்தான்.

மணியின் துக்கம் அதிகரித்துவிட்டது. "டி. எம்! என்னைத் தொந்தரவு செய்யாதே....நான் இந்த அவமானத்தைத் தாங்கமாட்டேன். கட்டாயம் நான் செத்துத்தான் போகப்போகிறேன். இனி நான் யார் முகத்திலும் விழிக்கமாட்டேன். நீ போய்விடு" என்று வெறுப்பும், அழுகையும் கலந்து கூறினன்.

மது:—சீச்சீச்சீ!...இத்தனை கோழையா நீ! இந்த அல்ப பரீக்ஷைக்கெல்லாம் தற்கொலை செய்துகொள்வதாயின் கடவுள் நமக்கு வைத்திருக்கும் பரீக்ஷைகளுக்கெல்லாம் என்ன செய்யப்போகிறாய்? இது சுத்தமாய் நன்றாயில்லை. பயந்தாங்கொள்ளித்தனத்தைக் கண்டால் சிரிப்பார்கள்.—

என்று இவன் கூறிமுடிக்குமுன், மணியின் தாயார் ஆக்ரோஷத்துடன் அங்கு வந்து, "அப்பா! புண்ணியமூர்த்தி! வந்துட்டாயா! 'சிரிப்பார்கள்' என்று ஏன் மெள்ளச் சொல்லுகிறாய்? சிரிக்கும்படிதான் செய்துவிட்டாயே! நீ கெட்டதுமில்லாமல் அவனையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி பயித்தியமாகவடித்துவிட்டாய். பாழாப்போன உன் சினேகிதத்தின் பலன் எப்போ பாத்தாலும் பாட்டு, பாட்டு, பாட்டுன்னு அலறும்படிச் செய்தது அவன்

மூளையையே கலக்கி வாசிக்கவிடாது நாசம் பண்ணி முண்டச்சி போல் மூலையிலடைத்துவிட்டது போருண்டாப்பா! உனக்கு நூறு கோடி நமஸ்காரம். இனி நீ இங்கு வரவேண்டாம். போடாப்பா! புண்ணியாத்மா! போ! போ...என்று தாக்ஷிண்யமின்றிக் கூறினாள்.

ஐயோ! பாவம்! மதுசூதனின் மனம் எப்படித்தானிருக்கும்? அப்போதும் சாந்தத்தை இழக்காது "மாமீ! அவன்தான் அறியாத்தனமாய்க்கவலைப்படுகிறானென்றால் நீங்களுமா இப்படிப்பேசுவது? சங்கீதமா உங்கள் மனத்திற்கு வெறுப்பைக் கொடுக்கிறது?"

என்று பேசி முடிப்பதற்குள் அந்தம்மாள் ஆத்திரங்கொண்டு "டேய்! மரியாதையாய் சொல்லும்போது போய்விடு. எத்தனையோ புத்திசாலியாய் நன்றாய்ப்படித்த என் குழந்தையை உருப்படவிடாது சதா பாட்டைப் பாடிக்கொண்டு பிச்சைக்காரனைப்போலும் சோம்பேறியைப்போலும் திரியச் செய்து பாழாக்கியது போருண்டா! போரும். ஸங்கீதத்தின் ஆதி தேவதையாகிய ஸரஸ்வதி உன்னைதான் தன் ப்ரதிநிதியாக இப்பூலோகத்திற்கு அனுப்பியிருக்கிறாள் என்பது எனக்குத் தெரியும் போடா அஸமஞ்சம்! பரீக்ஷையில் முட்டிபோட்டுவிட்டு வெக்கமில்லாமே துக்கம் விசாரிக்க வந்துவிட்டான். எங்க எஜமானர் வந்தால் உன்னை அடித்துக் கூட விடுவார். மரியாதையாய்ப் போய்விடு" என்று கழுத்தைப் பிடித்து தள்ளாத குற்றமாகக் கூறினாள்.

அதற்குமேல் மதுசூதனனால் அங்கு நிற்கமுடியவில்லை. "மாமீ! கோபிக்காதீர்கள். நான் போய் வருகிறேன். மணியை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். மணீ! நான் போய் வருகிறேன்" என்று கம்மிய குரலுடன் கூறினான்.

தன் தாயார் அவ்வளவு உதாசீனம் செய்து பேசியதைப் பொறுக்காத மணி சற்று கோபத்துடன் "டி. எம்! இப்படிவா; உட்கரு...அம்மா! வீணாக இப்படி மனம் நோகும்படிப் பேசிவிடுவது அழகல்ல. எனது முட்டாள்தனத்தால் ஏற்பட்ட தோல்விக்கு அவனா காரணம்? போம்மா! நீ உன் காரியத்தைப் பாரு...டி. எம்! என் மனம் குழம்பித் தவிக்கிறது. நாம் வெளியே போகலாம் வா!" என்று அவனே கூறிக்கொண்டு எழுந்தான்.

அவன் தாயாருக்கோ உள்ளூற பயம் உதைக்கிறது. "அடேய் மணீ! எங்கேயும் வெளியில் போகவேண்டாம். நீ ஒருவாய் சாதமில்லாது பட்டினி கிடக்கிறாய். எத்தனை சொல்லியும் கேட்கவில்லை.

தலைசுற்றி விழுந்துவிடுவாய். பேசாது படுத்துக்கொள்ளுடா! மணி! சொல்வதைக் கேளு" என்று வழிமறித்தான் சாமியைப்போல் கூறினாள்.

மணிக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. "அம்மா! எதாவது சொன்னால் கோபம் வருகிறது. திட்டுகிறாய்; நான் எங்கும் செத்து விடமாட்டேன். "வாடா! டி. எம்!" என்று அவனை இழுத்துக் கொண்டு போய்விட்டான். வீதியில் கொஞ்சதூரம் சென்றதும் மதுசூதனன் "மணி! பிச்சு என்ன பண்ணுகிறான் பார்த்துவிட்டுப் போகலாம் வா!" என்றான். பிறகு இருவரும் பிச்சுவின் வீட்டிற்குச் சென்றார்கள்.

வாசற்படி ஏறும்போதே உள்ளிருந்து வரும் சப்தம் கேட்டு இருவரும் அப்படியே நின்று உற்றுக் கவனித்தார்கள். பிச்சுவின் தகப்பனார் பல்லைக்கடித்துக்கொண்டு "அந்த முட்டாள் தடிப்பயல் இந்த வீட்டுப்பக்கம் இனிமேல் வரட்டும். காலை ஒடித்துவிடுகிறேன். சோதாப்பயல் சதா சர்வகாலமும் தன்னை பாட்டுப் பாடிக் கொண்டு, தான் கெட்டதுமின்றி உன்னையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டான். 'அந்த அயோக்கியனிடம் சேராதே! சேராதே' என்று முட்டிக்கொண்டேனே கேட்டாயா! வெங்கட்ராமன், கோபு, சரவணன் முதலிய பசங்களுடன் சகவாஸம் செய்திருந்தால் அவர்களைப்போல் நீயும் பாஸ் செய்திருக்கலாமே...பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் அமேத்யம் தின்னும்" என்பது பழமொழி. அப்படியே அந்த தாந்தோனிக் கூத்தாடியுடன் சேர்ந்த நீயும் முட்டி போட்டுவிட்டாய். இனிமேலாவது சேராது ஜாக்கிரதையாயிருந்து வாசி. பிரைவேட் வாத்தியார் ஒருவனை வைத்துத் தொலைக்கிறேன். இனுமே நீ ராகம் இழுத்தால் தெரியும் சேதி" என்று சுடச்சுடச் சொல்வது கேட்டதும், மதுசூதனனின் உள்ளம் புழுங்கியது.

தன் சினேகிதர்களாகவிருந்த பையன்கள் யார் யார் தோல்வியுற்றார்களோ, அதற்குக் காரணம் தான்தான் என்று அவரவர்கள் எண்ணித் திட்டுவது ஒருபுறம் வியப்பாயும், ஒருபுறம் வேடிக்கையாயும், ஒருபுறம் வருத்தமாயுமிருந்தது.

மது :—மணி! அங்கு ஒன்றாயிற்று. இங்கு இரண்டாயிற்று. மெத்தசந்தோஷம். என் சினேகிதர்களில் பாஸ் செய்த கோஷ்டியின் வீட்டில் என்ன சொல்கிறார்கள்? அதையும் பார்க்கலாமென்று

தோன்றுகிறது. பக்கிரி வீட்டுக்குப் போகலாம் வரையா?...

மணி:—ஊஹும்...நான் வரவில்லை. நான் நேரே நதிக்கரைக்குப்போகிறேன். நீ வேண்டுமானால் போய் பார்த்துக்கொண்டு வா. எனக்கு வெட்கமாயிருக்கிறது.

மது:—சரி! நீ வழக்கமாய் உட்காரும் இடத்திலிரு. நான் வருகிறேன்" என்றான். மணி போய்விட்டான். மதுசூதனன் பக்கிரி வீட்டிற்குப் போனான். பக்கிரியின் அண்ணன் அவனைத் தட்டிக்கொடுத்தவாறு, "வா! வா! டி. எம்! உனக்குப் பரீக்ஷை போய் விட்டதுபற்றி மிகவும் கவலையாயிருக்கிறது. படிப்பில் அக்கரையின்றி எப்போ பார்த்தாலும் பாடிக்கொண்டிருந்தாயாமே! உங்கப்பா மிகவும் கவலைப்படுகிறார்" என்றான்.

இதற்குள் பக்கிரி ஓடிவந்து "அண்ணா! இவனுடைய அற்புதமான சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமாக லயித்துப்போய் அந்த சந்தோஷத்துடனேயே படித்ததனால்தான் எனக்கு முதல் வகுப்பில் தேறியது. தண்ணீரில் போட்ட சர்க்கரை தன் உருவத்தை அடியோடு இழந்து தன் இனிப்பைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்விப்பதுபோல் டி. எம். நாங்கள் படித்துக் களைப்புற்றும் குழம்பியும் இருந்த சமயம் தன் அமிருத கானத்தால் எங்களை உத்ஸாகப்படுத்தி புதிய சக்தியையும் உணர்ச்சியையும் உண்டாக்கினான்; ஆனால் தான் தோற்றுவிட்டான்...என்ன டி. எம்!" என்று சந்தோஷத்துடன் கேட்டான்.

மதுசூதனின் ஆச்சரியம் கரைபுரண்டுவிட்டது. தன் பாட்டினால்தான் அவர்கள் தோல்வியடைந்ததாய் அந்த இடங்களில் சன்மானம் கிடைத்தது. இந்த இடத்தில் அதே பாட்டினால்தான் முதல் க்ளாஸ் கிடைத்ததாகச் சந்தோஷ வார்த்தை கிடைக்கிறது. இதென்ன ஆச்சரிய உலகம்! மக்களின் மனோபாவம் எத்தகைய விசித்திரமாயிருக்கிறது" என்று தனக்குள் எண்ணி மகிழ்ந்தான். மற்ற இடங்களைப்போல் வசைமாரி கிடைக்காமல் இம்மட்டுமாவது கிடைத்ததுபற்றிச் சந்தோஷப்படாதிருக்கமுடியுமா! தன் சங்கீதத்தினால் ஒருவனாவது வையாது த்ருப்தியடைந்ததைக்கேட்டு அவனை யறியாது அவன் மனம் பூரித்தது. "பக்கிரீ! நீ பாஸ் செய்ததற்குப் பாராட்டு தெரிவிக்கவே வந்தேன். ரொம்ப சந்தோஷம். நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே நதிக்கரைக்கு வந்தான்.

அதற்குமுன் குழம்பிக்கிடந்த அவன் மனம் இப்போது சற்று

தெளிவு பெற்றது. சலசலவென்று சப்தத்துடன் துல்லியமாய் ஓடும் நதியின் நீரைப்போல் மனம் தெளிந்தது. அவனை யறியாது வாசஸ்பதி ராகம் வாயிலிருந்து சிதறிக் காற்றுடன் கலந்து இனிமை யாய் தவழ்ந்து நதிக்கரையில் ரீங்காரம் செய்தது.

## 4

JL
M211 A12 …
…

வாசஸ்பதி ராகம் வாயிலிருந்து சிதறிக் காற்றுடன் கலந்து இனிமையாய் தவழ்ந்து நதிக்கரையில் ரீங்காரம் செய்தது. வனதேவதையின் கானத்தைப்போல் அபூர்வமாய் ஒலிக்கும் சங்கீதத்தில் நதிக்கரையிலுள்ளவர்கள் லயித்துப்போய்விட்டார்கள்.

"என்ன ஆச்சரியம்! பாடுவது ஒரு வித்வாம்ஸினியல்ல. கேவலம் ஒரு பிச்சைக்காரி, அதிலும் பெரியவியாதிக்காரி, தாளம் போடுவதற்குக்கூடக் கைகள் வசப்படவில்லை. அவளுக்கு சரஸ்வதியின் கடாக்ஷம் எத்தனை பரிபூர்ணமாயிருக்கிறது? எத்தனை அழகாய்ப் பாடுகிறாள்? என்ன அகாரம்! என்ன கம்பீரம்! என்ன ரவை ஜாதி பேசுகிறது. எத்தனை இனிமை த்வனிக்கிறது. அடாடா! எத்தனையோ கஷ்டப்பட்டுப் பணத்தைச் செலவிட்டுச் சொல்லிக் கொடுக்கும் பெண்கள் இத்தனை அழகாய்ப் பாடுவதில்லை. என்ன ஆனந்தமாயிருக்கிறது?" என்று நதிக்கரையிலுள்ள அத்தனை ஜனங்களும் கூறியவாறு பாட்டைக் கேட்டார்கள்.

பரீக்ஷையில் முட்டி போட்டுவிட்டு மனங் கலங்கி உட்கார்ந்திருக்கும் மணிக்கு இந்த சங்கீதத்தின் இனிமை, அதியற்புதமாய் காதில் விழுந்தது. சில நிமிஷநேரம் அவன் அப்படியே பிரமித்துப் போய்விட்டான். இத்தகைய அமிருதகான மழை பொழியும் அழகி யாரோ பார்க்கலாமென்ற ஒரு சிறு வேட்கை உண்டாகியது.

உடனே எழுந்து கானம் வரும் திக்கை நோக்கிவந்தான். பார்ப்பதற்குச் சகிக்காத ஓர் உருவம் கொடிய வியாதியுடன் நின்று பாடுவதைக் கண்டதும் அவன் மனத்தில் அந்த விநாடிக்கு முன்னிருந்த ஆனந்தம், கானத்தில் ருசி, ப்ரேமை எல்லாம் அடியோடு மாறிப்போய் "சேச்சே....பயங்கர ஸ்வரூபம்" என்று முன்வைத்த

183043

காலை பின்வைத்தவாறு போய்விட்டான்.

அநித்ய உலகினை சாச்வதமென்று
அனுதினமும் நம்பி அகமகிழாதே
இன்றிருப்பதுமெய் நாளை யிருப்பதுபொய்
என்றதை யறிந்தோர் இன்புறலாமே...

என்ற பாட்டை சஹானா ராகத்தில் பாடியவாறு பிச்சைக்காரி ஒரு தகரக்குவளையை எல்லோரிடமும் காட்டியவாறு, "ஐயா !... அம்மா! தாயே!" என்று பிச்சை கேட்டுக்கொண்டே சென்றாள். மதுசூதனன் முன்பு தெரிவித்ததுபோல் பாடிக்கொண்டே வருகையில் "கந்தர்வ கானமோ! வனதேவதையின் அமிருத நாதமோ!" என்று மயங்கிப்போய் தேன் குடித்த நரியைப்போல் இந்த திக்கை நோக்கி வந்தான். அச்சமயம் அந்தப் பிச்சைக்காரி,

ப்ரேமை நதியினில் பேரின்ப வெள்ளம்
ப்ரேமா காந்தனின் ப்ரியம்நிறை உள்ளம்
ப்ரேமையே மாந்தரின் பிணிதனைத் தள்ளும்
ப்ரேமையே ஆனந்த ப்ரியநிலை கொள்ளும்.
வற்றாகருணையின் வாரிதியே! உந்தன்
பொற்றாமரைப் பதத்தில்தொழ அருள்புரிவாய்
உற்றார் உறவினர் வீண்சந்தைக் கூட்டம்
பற்றேது மில்லாது பணியவழி காட்டும்.

என்று பாடிக்கொண்டு சென்றதைக் கண்ட மதுசூதனனின் உள்ளத்தில் ஆனந்த வெறி பிடித்துவிட்டது. "அடடா! என்ன ஆனந்த கீதம்! என்ன அருமையான கானம்!" என்று தன்னையே மறந்து அந்தப் பிச்சைக்காரியைப் பிச்சைக்காரி என்றோ, வியாதிக்காரி என்றோ சற்றும் நினைக்காமல் அவள் கானத்தில் ஐக்யமாகி அப்படியே நின்றுவிட்டாள்.

"தாயே! தர்மலக்ஷ்மீ! தர்மப்பிரபுவே...தம்பிடி போடுங்களே!" என்று அந்தப் பிச்சைக்காரி கேட்கும்போது சிலர் அவளருகில் செல்லவும் வெறுத்தார்கள். சிலர் தம்பிடியை வீசி எறிந்தார்கள். சிலர் பாட்டைக்கேட்டுவிட்டு நைஸாகப் பேசிக்கொண்டே போய் விட்டார்கள்.

கீழே விழுந்த தம்பிடிகளைப் பொருக்கமுடியாது அந்தப் பிச்சைக்காரி தவிப்பதைப் பார்த்த மதுசூதனன் ஓடோடிச்சென்று தம்பிடிகளைப் பொருக்கினான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த

அவன் சிநேகிதர்களில் சிலர் மதுசூதனன் மீது அபாரமான வெறுப்பும் கோபமுங்கொண்டு "டே டே டே! டி. எம்!... அடேய்... சீச்சீ! உனக்கு நிச்சயமாக மூளைதான் கலங்கிவிட்டது. சந்தேகமே இல்லை. எவளோ வியாதிப் பிடித்த பிச்சைக்காரியின் பிச்சைக் காசை வெட்கமில்லாமல் நடுத்தெருவில் பொருக்க வந்துவிட்டாயே! எழுந்து வாடா!" என்று அதட்டியவாறு அவன் பொருக்கிய தம்பிடிகளையும் கையிலிருந்து தட்டிவிட்டு அவனைக் கையைப் பிடித்துத் தாதரவென்று இழுத்தார்கள்.

மதுசூதனனின் மனம் துடித்தது. "ஐயோ! மனிதன் மனிதத் தன்மையை அறிந்து பச்சாத்தாபத்துடன் உபகாரம் செய்வது ஓர் இளப்பமா! எனக்கு அப்படித் தோன்றவில்லை; என்னை விடுங்கள். ஐயோ, பாவம்! வியாதியினுலும் அங்க ஊனத்தினுலும் கஷ்டப் படுகிறவர்களுக்குத்தான் அவசியமாய் உபகாரம் செய்யவேண்டும். நீங்கள் ஒரு தம்பிடி காசும் கொடுக்காவிட்டாலும் யாரோ தர்மத் திற்காகப் போட்டதையும் இப்படி அநியாயமாய்த் தட்டுவது நியாயமா! உங்களுக்கு மனத்தில் ஈவிரக்கம் பச்சாத்தாபம் ஒன்று மில்லையா! வியாதி வருவதும் போவதும் கர்மாவின் விளையாட் டல்லவா! அவரவர் செய்துள்ள பாபத்தின் வேகத்தை யாரறி வார்கள்? கடவுளின் சோதனையைப் பரிகஸித்து ஏளனம் செய்வதா மனிதன் கடமை?....சேச்சே...ஒத்திப்போங்கள்."

என்று கூறிக்கொண்டே அங்குச் சிதறிய தம்பிடிகளை மீண்டும் பொருக்கினன். இந்த சந்தர்ப்பத்தில் அகப்பட்டதை அடித்துக் கொண்டு போகும் புண்ணியாத்மாக்கள் எத்தனை பேர்? ஒரு சோம் பேறி சில தம்பிடிகளைப் பொருக்குவதுபோல் பொருக்கி அமுக்கப் பார்த்தான். வேடிக்கைப் பார்க்கும் பொதுஜனங்களில் ஒருவன் இதை யறிந்து அந்த சோதாவை அடித்துத் துரத்தி தம்பிடிகளைப் பிடுங்கி பிச்சைக்காரியிடம் கொடுத்தான். பிச்சைக்காரி அச்சமயம்,

இராகம் : கேதாரம். தாளம் - த்ரிபுடை.

பல்லவி

மாயா மோகத்தை விடு மனமே!
தீயவழியில் செல்லாதிரு தினமே. (மா)

அநுபல்லவி

பேயாய்த் திரிந்து பிணியா லலைந்து
நாயாய்க் குரைத்து நசித்திடச் செய்திடும். (மா)

சரணம்

காலன் வந்தழைத்திடும் காலையில் கண்ணீர்
மாலை யுதிர்த்திடில் மயங்குவனோ நமன்
சீலமுடன் சத்ய சிந்தனைசெய்து கோதா
லோலன் பதம்பணிந்து காலனை வென்றிடு. (மா)

என்ற பாட்டைப் பாடுவதைக் கேட்டு மதுசூதனனின் மனம் உருகியது. தம்பிடிகளைப் பொருக்கி அந்தப் பிச்சைக்காரியின் குவளையில் போட்டுவிட்டு நின்றான். பிச்சைக்காரி எல்லோருக்கும் வந்தனத்தைச் செய்தவாறு, மாயா மோகத்தை விடுமனமே...என்று பாடிக்கொண்டே போய்விட்டாள். ஜனங்கள் தாறுமாறாகக் கலைந்துவிட்டார்கள். பிச்சைக்காரியின் நாதமும் காற்றுடன் கலந்து மெல்லிய தளிர்போல் அசைந்து போய்க்கொண்டே இருந்தது. நதியின் சலசலப்பான சப்தத்துடன் தெளிந்து செல்லும் நீரோட்டத்தின் அழகு எல்லோருடைய உள்ளத்தையும் பரவசமுறச்செய்தது.

மதுசூதனன் சற்றுநேரம் அந்த திக்கையே பார்த்துக்கொண்டு நின்றான். அச்சமயம் ரங்கநாதன் அங்கு வந்து மதுசூதனன் தோளைக் குலுக்கி "டேய்! உனக்குப் பயித்தியம் தலைக்குமேல் தான் போய்விட்டது. எந்த பிச்சைக்காரக் கழுதை பாடினாலும் வெட்கமில்லாமே இப்படி நிற்கிறாயே! சங்கீதம் அமிருதம்போலிருக்கிறதா, அன்றி சாஹித்யம் உன் இதயத்தைத் துளைக்கிறதா, அன்றி அந்த மதனசுந்தரியின் அதிரூபலாவண்ய ஸ்வரூபம் உன்னை மதிமயங்கச் செய்துவிட்டதா? என்னடா சமாச்சாரம்? மிகவும் கேவலமாகிவிட்டாயே!" என்று அதிக சுதந்தரத்துடன் கேட்டான்.

சற்று மனம் குழைந்தவாறு மதுசூதனன் பேசத்தொடங்கி, "ரங்கநாத்! நீ அதீதமாகப்பேசுகிறது எனக்குவருத்தமாயிருக்கிறது. ஆனந்த யமைழபோல் சங்கீதம் பொழியும் வானம் எதுவாயினும் அதைப் போற்றுதல் முறைதானே! இதே பாட்டை ஒரு பாடகன் பாடிவிட்டால் அதற்கு மிக்க பெருமையும், புதுமணமும் வந்துவிடுகிறது என்கிறாயா! என் மனத்திற்கு அப்படிப் படவில்லை. அம்மாதிரி நினைப்பதும் தவறு. அவள் பிச்சைக்காரியோ, வியாதிப் பிண்டமோ, தரித்திர தேவதையோ எதுவாயினும் என் கண்ணிற்குப்படவில்லை. அவளுடைய கண்டத்திலிருந்து, மடை திறந்துவிட்ட நீரைப்போலும், வைரத்தில் ஜ்வலிக்கும் ஜ்வலிப்பைப் போலும், சமுத்திரத்தின் ஓய்விலா சலிப்பிலா அலையைப் போன்

றும் எழுந்து வந்து மக்களின் இதயத்தை ஒரு குலுக்கு குலுக்கு கிறதே! அந்த அபூர்வ நாதத்திற்கும், கானத்திற்கும் நான் வணங்கு கிறேன்!" என்ருன்.

ரங்கன் இடைமறுத்து, "டேடெடே...இதுமாதிரி இன்னும் சிலரிடம் கூறினல் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் உன்னைக் கொண்டுபோய் விடுவார்கள். தெரியுமா! ஏற்கெனவே உன் தங்கையின் புருஷனும், உன் அண்ணனும் உன்னைப் பார்க்கவும் அரு வருக்கிருர்கள். அன்ருெரு நாள் ஒரு குருட்டுக்கிழவன் ஆனந்த மாய்க் கவி பாடினன் என்று அவனுடன் மூன்று நாள் இரவு பகல் சுற்றித்தான் பரீக்ஷையில் முட்டிபோட்டாய்.

இதோ பார் டி. எம்! நான் சொல்வதைக் கேளு. நீ பாடு வதும் அதை ஆனந்தத்துடன் அனுபவிப்பதும்வரையில் வைத்துக் கொள்ளு. வீண் தண்டாபேரத்திற்குப் போகாதே. இது சுத்த மாய் நன்ருயில்லை. வா! வீட்டிற்குப் போகலாம்" என்ருன்.

மதுசூதனனுக்குச் சிறு குழந்தை முதல் சங்கீதம் கேட் பதிலும் பாடுவதிலும் அளப்பரிய பிரியம். ஆகாரத்தைக்கூட மறந்துவிடுவான். வெகு ஆசைப்பட்டு ஸ்வீகாரம் வாங்கிய குழந்தை யாதலால் திருவேங்கடமும் ராஜம்மாவும் சதா சர்வகாலமும் மது சூதனனின் இஷ்டம்போலவே மனங்கோணமல் சகலவிதத்திலும் செல்வமாக வளர்த்துவிட்டார்கள். பாட்டுத் தெரிந்த யாரையாவது கூப்பிட்டு எந்த நேரமும் பாடச்செய்வது, தொட்டிலில் போட்டு ஆட்டச்செய்வது, இம்மாதிரி பழக்கத்தைச் செய்து அவனுக்கு இயற்கையாயிருந்த ஆசையை நன்ருகப் பதியச்செய்துவிட்டார்கள்.

ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய் ராஜம் கர்ப்பவதியாகியபிறகு ஊரே ஒரு பரபரப்பில் மூழ்கியது. "பெண் குழந்தையாய்ப் பிறந்து விட்டதால், சட்டப்பூர்வமாய் ஸ்வீகாரம் செய்த மகனுக்குத்தான் இவர்களுக்குள்ள சகல சொத்தும் சேர்ந்துவிடும். இத்தனை நாட்கள் கழித்து ஒரு குழந்தை அருமையாய் பிறந்திருக்கிறதே! அதிலும் கண்ணுன பெண்ணுய்ப் பிறந்துவிட்டதே! அதற்குச் சிங்காரித்து மகிழ்வதா! சங்கீதம் கற்றுக்கொடுப்பதா! சீர்வகைகள் செய்து சிறப்பாக விவாகத்தைச் செய்வதா! எதற்கும் இல்லாது கடவுள் இம்மாதிரி பரீக்ஷை செய்துவிட்டாரே!" என்கிற ஒரு தனி ஏக்கம் ராஜம்மாளின் உள்ளத்தில் புகுந்துவிட்டது.

இதை ஆதரித்து இன்னும் வளர்ப்பதுபோல் ராஜம்மாளின்

உடன்பிறந்தவர்கள், உற்றார், பெற்றோர் முதலியவர்களும் இதையே பேசி ராஜம்மாளின் மனத்தில் பேத புத்தியை உண்டாக்கிவிட்டார்கள். ஆனால் திருவேங்கடத்திற்கு மட்டும் தன் மனைவி நினைக்கும் வித்தியாசம் சற்றும் பிடிக்கவில்லை. "நாம் அப்போதிருந்த சங்கடமான நிலைமையில் நமக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்த குழந்தை இன்று வேம்பாகிவிடுமா!

அவனை நாம் கைநீட்டி வாங்கிக்கொண்ட வேளைதான் நமக்குக் கடவுள் லக்ஷ்மியைக் கொடுத்தார். ஆதலால் இரு குழந்தைகளையும் இரு கண்களைப்போல நாம் பார்க்கவேண்டியதுதான் கடமை. அவனை நீ வித்தியாஸமாய் நினைத்தால் இந்த குழந்தைக்கு அது கேடாய் முடியும்" என்று உபதேசம் செய்து அவள் மனத்தை அதிகமாய் மாற இடங்கொடுக்காமலேயே செய்துவந்தார்.

எப்படியோ இரு குழந்தைகளும் வளர்ந்துவிட்டார்கள். ராஜம்மாளின் எண்ணமும் வளர்ந்துகொண்டே போயிற்று. மதுசூதனனின்பெற்றோர்களும் தம் கைச்சரக்கைவிடாமல், "எங்கள் குழந்தையைக்கையேந்தி வாங்கிக்கொண்டு நடுச்சந்தியில் விட்டுவிட்டார்கள். பக்ஷபாதமாய் பார்ப்பது எந்த கடவுளுக்கு ப்ரீதி. ஆண்டியாய்த் திரிய வைப்பதற்குத்தானா எங்கள் கண்ணைப் பிடுங்கியதுபோல் வாங்கிக்கொண்டார்கள்? எங்களிடமே இருந்தால் குழந்தை சந்தோஷமாயும் சமத்தாயும் வளருமே! அதுவும் போய் சதா சோம்பேறி போல் திரியச் செய்துவிட்டார்களே! இனிமேல் இவனைக் கவனிப்பது எது?" என்றெல்லாம் வசைப் புராணம் படிக்கவாரம்பித்து விட்டார்கள்.

இதற்கு ஏற்றாப்போல் ஆதி முதலே மதுசூதனன் சரியாகப் படிக்காமல் சதா பாடிக்கொண்டே திரிவதையும், வீதியில் எந்த பிச்சைக்காரன் பாடினாலும், மேளக்காரன் வாசித்தாலும், பஜனை கோஷ்டிகள் சென்றாலும் அவர்களின் பின்னாலேயே நாட்கணக்கில் வீட்டையும், பள்ளிக்கூடத்தையும் மறந்து தாந்தோனியாய் அலைவதையும் பார்த்தால் பெற்றவர்களின் புகார்புராண காண்டத்திற்கு இன்னும் சில அத்யாயங்களைச் சேர்ப்பதற்கு இடம் உண்டாகியது.

இது விஷயத்தில் எத்தனை விதமாகத் திருத்தியும் மதுசூதனன் திருந்தவே இல்லை. திருவேங்கடத்திற்கு இது மிகவும் குறையாகவே இருந்தது. என்ன செய்யலாம்? நயத்திலும், பயத்திலும் சொல்லிப் பார்த்ததெல்லாம் வீணாகிவிட்டன. எப்படியோ படிக்க

வைத்து மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்துவிட்டான். எப். எ. வகுப்பில்தான் அவன் முட்டிபோடுவது இது மூன்றுவது தரமாயிற்று.

ராஜம்மாளுக்கு இத்தனை வருஷம் கழித்து அருமையாய் ஒரு பெண் பிறந்துவிட்டதால் அந்த பெண் குழந்தையை செல்லமாக வளர்க்கும் முறையில் மரியாதை பெருந்தன்மை, கவுரவம் முதலியவைகளை ஊட்டி வளர்க்கவும் மறந்தாள். தான் மதுசூதனனிடம் கொண்டுள்ள வித்யாஸபுத்தியின் காற்றே அந்த இளந்தளிர் மனத்திலும் புகும்படியும், கண்டதற்கெல்லாம் பிடிவாதம் செய்து காரியத்தைச் சாதிக்கவும், ஒரு வேலைகூடச் செய்யாது ஒட்டாரம் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கவும், யாரைப்பார்த்தாலும் இளப்பமாக நங்கு காட்டிப் பேசவும், உதாசீனமாயும் துடுக்காயும் கேலி செய்யவும் துணியச் செய்துவிட்டாள்.

ராஜம்மாள் செல்லக் குழந்தையாயிற்றே என்று அவளைத் தலைக்குமேல் ஏறவிட்டுவிட்டதின் பலன் சதா வீட்டில் மதுசூதனனிடம் சண்டை போடவும் அந்த வ்யாஜமாக வீட்டில் சதா கலவரம் நடக்கவும் ஆரம்பித்துவிட்டது. இது இன்னும் எப்படி எப்படி முத்திவிடுமோ என்ற பயத்தினால் லக்ஷ்மிக்கு 10 வயது முடிவதற்குள்ளேயே ராஜம்மாள் தனது தாய் வழியின் மூலமான உறவினர் பிள்ளைக்குப் பேசி முடித்து தமது சக்திக்கு மிஞ்சிய சீர்வகைகளும், நகைகளும் செய்து கொடுத்துக் கல்யாணத்தை முடித்தாள்.

மாப்பிள்ளையும் கூடவிருந்தே படித்து வளரும் ஆசையுடன் அவனை வீட்டோடு கொண்டு வைத்துக்கொண்டு படிக்கவைத்தார்கள். மதுசூதனன் பாட்டுப் பாடி பரீக்ஷையில் தோற்றுவிடுகிறுன் என்ற புகாரும் கோபமும் கொண்டு அவனைத் திட்டுவார்கள்.

ஆனல் மாப்பிள்ளை ஸ்வாமியோ தனக்கு வேண்டிய சகாக்களுடன் ஊர் சுற்றுவதும், மாமியாரிடமும் மாமனரிடமும்பணத்தைப் பறித்து நல்ல உடை வாங்குவதும், ஓட்டலில் சாப்பிட்டு ஒழிப்பதும் சரியானபடி படிக்காமல் அலைவதும் பரீக்ஷை சமயத்தில் எப்படியும் தனக்குத் தோற்றுவிடும் என்று தெரிந்து நதியில் குளிப்பது, எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சாப்பிடுவது, ஜுரம் வருவதற்கு வேண்டிய மார்க்கத்தைக் கட்டாயம் செய்துகொள்வது, இல்லாவிடில் அஜீர்ணமாக வயிற்றுப்போக்கை உண்டாக்கிக்கொள்வது, கையில் வெட்டு காயத்தை ச்ருஷ்டித்துக்கொள்வது போன்ற அதியற்புதலீலைகளைச் செய்து வீட்டில் படுத்துக்கிடப்பான்.

மருமகப்பிள்ளையின் இந்த லீலாவினோத கோலாகலம் தெரியாத மாமியாரும், மாமனாரும் 'ஏதோ சாபக்கேடுதான் இம்மாதிரி சமயத்திற்கு உடம்புக்கு வந்துவிடுகிறது. எந்த மகாபாவிகள் வயிறெரிந்து திட்டுகிறார்களோ!' என்று விசனப்படுவதும் வயித்தியம் செய்வதுமாக விருந்தார்கள்.

சில வருஷங்கள் சென்றதும் மாமனார் அவ்வூர் ஜமீந்தாரிடம் மெல்ல சிபார்சு செய்து அவருடைய சொந்த துணி மில்லில் வேலைக்கு அமர்த்திவிட்டார். லக்ஷ்மியின் அதிர்ஷ்டம் அவன் ஒரு வழியாகிவிட்டான் என்ற திருப்தியுண்டாகிவிட்டது.

மாப்பிள்ளையின் ஆதிக்கத்தில் மதுசூதனன் மிகவும் சிறுமையாகவே நடத்தப்பட்டு வருவதையும் அவன், மகா சாந்த குணமுடையவனாகையால் பொருட்படுத்தவே இல்லை. இந்நிலைமையில் அவனுக்கு சங்கீதப் பித்தும், சிறு சிறு கவி பாடும் ஆற்றலும் உண்டாகியதால் அவன் எங்கு பஜனை மடங்கள் உண்டோ அங்கெல்லாம் அதிகமாகச் சஞ்சரிக்கவாரம்பித்தான். அதைத் தடுப்பதற்காகவே அவனுக்கும் ஓர் விவாகத்தைச் செய்துவிட்டால் ஒருவாறு சரியாகிவிடுவான் என்ற எண்ணமே திருவேங்கடத்தின் மனத்தில் எழுந்தது. ராஜம்மாளும் அதற்கு விரோதமாக எதுவும் சொல்லவில்லை. ஏனென்றால் கல்யாணச் சந்தர்ப்பத்தில் வரதக்ஷிணைக்காக வாங்கும் பணத்தில் லக்ஷ்மிக்கு உயர்ந்த வைர நகை செய்துவிடலாம் என்கிற பேராசை சிறிது தலை தூக்கி நின்றது. அதனால் தானே கல்யாணத்திற்கு முனைந்து நின்றாள்.

இம்முறையாவது பரீக்ஷையில் தேறிவிட்டால் கண்டிப்பாய் இரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணை வரும் என்று மகிழ்ந்திருந்ததற்கு மாறாக பரீக்ஷையில் முட்டிபோட்டுவிட்டதால் ராஜம்மாளுக்கு மனவருத்தமாகிவிட்டது. "இந்த பீடை எங்கே தொலைந்துவிட்டதோ! தெரியவில்லையே!" என்று திட்டிக்கொண்டிருக்கையில், லக்ஷ்மி நதியிலிருந்து குடத்தில் ஜலத்தை எடுத்துக்கொண்டு ஆத்திரத்துடன் வந்து, "அம்மா! உன்னருமைப் பிள்ளையின் பவிஷு அங்கு சந்தி சிரிக்கிறது. யாரோ ஒரு பிச்சைக்காரி பாடிக்கொண்டேபோனாள். இந்தப் பயித்தியம் அந்த தம்பிடிகளைப் பொருக்கிக்கொண்டே அவள் பின்னால் ஓடியதைப் பார்த்தால் எனக்கு அங்கேயே அப்படியே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமா என்று இருந்தது. ஊரே சிரிக்கிறது. இந்த அஸமஞ்சத்திற்குக் கல்யாணம் வேறு செய்ய

வேண்டுமென்று இரவு பகல் தவிக்கிருயே!" என்று முகத்தைச் சுளித்தவாறு ஒரு பாணத்தைப் பிரயோகம் செய்தாள். அந்தப் பிரயோகத்தின் வேகம் உச்சத்தை எட்டியது. "ஆகட்டும் அந்த அயோக்கியப்பயல் வரட்டும். ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்" என்று உறுமியபடியே அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வீதியில் நின்ருள். எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. சிலுசிலுப்பான காற்று ஆனந்தமாய் வீசியது.

---

## 5

எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. சிலுசிலுப்பான காற்று ஆனந்தமாய் வீசியது. மதுசூதனனின் உள்ளத்தில் சந்தோஷ வெறி பிடித்ததுபோல் பொங்கியது. அந்த உணர்ச்சியின் பெருக்கால்,

நித்தமுனே வேண்டி மனம் நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமை யுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார் செய்கை யெல்லாம்வெற்றிகொண்டே
உத்தம நிலே சேர்வ ரென்றே உயர்ந்த வேத முரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய் யோடீ? சுடர் மணியே! திருவே!
மெத்த மயல் கொண்டு விட்டேன் மேவிடுவாய், திருவே!

—பாரதியார்.

என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருக்கையில் ஆவேசத்துடன் ராஜம்மாள் உள்ளே வந்து "ஏண்டா! உனக்கு புத்தி என்பதே வரப் போவதில்லையா? நான் சொல்வதெல்லாம் உன் காதில் நாய் குரைப் பதுபோலவா இருக்கிறது? மணி 7 ஆகிவிட்டது. 8 மணிக்கெல் லாம் அவர்கள் உன்னைப் பார்க்கவருவதாகச் சொல்லியனுப்பியிருக் கிருர்கள். நீ இப்படி பிசாசுபோல் தலேயும் வேஷமுமாய் உட் கார்ந்து பயித்தியக்காரனைப்போல் பாடிக்கொண்டிருந்தால் வருகிற வர்கள் எப்படி மதிப்பார்கள்? கொஞ்சமாவது கவுரவம் வேண் டாமா! எழுந்திருடா! எழுந்திரு!" என்று பல்லேக் கடித்துக் கொண்டே கூறினுள்.

மது:—அம்மா! நான் சொன்னுல் என்மேல் கோபிக்கிருய்.

எனக்குக் கல்யாணமே வேண்டாம்மா! நான் இப்படியே ஆனந்த ஸ்வரூபியாயிருப்பதற்கு அனுக்ரகம்பண்ணி விட்டுவிடுங்கள். நீங்கள் வீண் கவலையோ, கஷ்டமோ படவேண்டாம். நான் விவாகத்தைச் சிறிதும் விரும்பவில்லை. நினைக்கவும் பிடிக்கவில்லை. நான் வெளியே போகிறேன்.

ராஜம் :—ஓகோ! உன்னுடைய அபிப்ராயத்தையும், சட்டத்தையும் நான் கேட்க வரவில்லை. உன்னை எத்தனையோ ஆசையாய் கையேந்தி வாங்கி வளர்த்ததற்குப் பலன் நாங்களடையவேண்டாமா! உனக்கொரு கால்கட்டு கட்டிவிட்டால்தான் எங்கள் மனம் நிம்மதியடையும். நீ ஒரு தடங்கலும் சொல்லவேண்டாம். எழுந்து தலைவாரி, முகம் கழுவி, நெத்திக்கு இட்டுக்கொண்டு, நல்ல உடையணிந்துவா...உம். எழுந்திரு.

மது :—அம்மா! என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். குருவியின் தலையில் பனங்காயைக் கட்டுவதுபோல் எனக்குக் கட்ட வேண்டாம். சம்சார பாரமே எனக்கு வேண்டாம். என்னுடைய காலம் முற்றும் தொல்லையில்லாத ஆனந்த நிலையில் கடத்திவிடுகிறேன். பகவானைப் பஜித்துப் பாடுவதிலுள்ள இன்பம் எனக்கு இவ்வுலகில் ஒன்றிலுமே இல்லை. அம்மா! என் ஆசையைக் கெடுக்காதீர்கள்—என்றான்.

அச்சமயம் வீதியில் ஒரு ஜட்கா வந்து நிற்பதைக் கண்டதும் ராஜம் வெகு பரபரப்புடன் ஓடித் தன் கணவனை அழைத்து விஷயத்தைத் தெரிவித்தாள். உடனே அவர் வந்திருப்பவர்களை வரவேற்று உபசரித்தார்.

ராஜம்மாள் எத்தனை சொல்லியும் மதுசூதனன் கேட்கவே இல்லை. வந்தவர்கள் பிள்ளையாண்டானைப் பார்ப்பதற்காக அழைத்தார்கள். தகப்பனார் வார்த்தையைத் தட்டாது வேண்டாவெறுப்பாய் வந்து நின்றான். வந்தவர்களுக்குப் பிள்ளையை மிகவும் பிடித்துவிட்டது. திருப்திகரமாகப் பேசவாரம்பித்தார்கள். வரதக்ஷிணை இரண்டாயிரம் ரொக்கமாகக் கொடுத்து, இரண்டாயிரத்திற்குச் சீர் செய்து, பெண்ணுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு நகை போட்டுக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் போட்டார்கள்.

அதே சமயம் வீதியில் ஓர் மதுரகானம் கேட்டது. உடனே மதுசூதனன் சொல்லாமல் வீதிக்கு ஓடிவிட்டான். முன்பொரு தினம் நதிக்கரையில் பாடிய பிச்சைக்காரி பாடிக்கொண்டே ராப்

பிச்சைக் கேட்டவாறு வீதியில் சென்ருள்.

அவள் பின்னுல் சிலர் சென்றபடியே பாட்டைக்கேட்டார்கள். பசியின் கொடுமையைத் தாங்காத பிச்சைக்காரி கெஞ்சிய குரலில் தர்ம ப்ரபுக்களே! தாகமும், பசியும் மரண பாதையாயிருக்கிறது. ஒரு வாய்த் தண்ணீரும் ஒரு கவளம் சோறும் கொடுங்களேன். ப்ராணன் தவிக்கிறதே'' என்று கண்ணீர் வழியக்கேட்டாள்.

மதுசூதனின் உள்ளம் உருகியது. இவனைப் பார்க்க வந்திருப்பவர்கள் கூடத்தில் உட்கார்ந்திருக்கையில் தடதடவென்று சமையல் கட்டுக்குச் சென்று சாதமும் குழம்பும் எடுத்து ஒரு பாத்திரத்தில் கலந்து சின்ன இலையில் வைத்து ஒரு டம்ளரில் தீர்த்தமும் எடுத்துக்கொண்டு புறப்படுவதைக் கண்ட லக்ஷ்மி "ஐயையோ! இதென்னடா அனியாயக்கொள்ளை! அம்மா! அம்மா! இங்கே வாயேன்! ஐயையோ! அண்ணனுக்குப் பயித்தியம் முற்றியே போய்விட்டது. சாப்பாடெல்லாம் கொள்ளைபோறது'' என்று கூச்சலிட்டபடியே மதுசூதனனைப் போகவிடாது தடுத்து ராக்ஷஸி போல் கத்தினுள்.

மதுசூதனன் நிதானமாகப் பேசத்தொடங்கி "லக்ஷ்மி! ஒரு ஆத்மா பசியால் துடிக்கிறது; உயிர் போகிறது என்ருல் ஒருவாய்ச் சோறு போடுவது குற்றமா! ஒரு ஆத்மா த்ருப்தி யடைந்து வாழ்த்துமானுல் அந்தப் புண்ணியம் இந்தக் குடும்பத்தையே காக்குமல்லவா! விருந்தோம்பல் என்கிற தலைப்பின் கீழ் எத்தனை அருமையாகப் பெரியோர்கள் பாடியிருக்கிருர்கள்? தருமம் செய்வதைத் தடுக்காதே லக்ஷ்மீ! விடு விடு'' என்று லக்ஷ்மியின் கையைத் தள்ளிக்கொண்டு வீதிக்கு ஓடி அந்தப் பிச்சைக்காரியை நோக்கி, "இந்தா! இந்தா! வயிருறச் சாப்பிடு. உன் ஆத்மா த்ருப்தியாகட்டும். இந்த சாண் வயிற்றின் சங்கடத்திற்குத்தானே உலகமே தத்தளிக்கின்றது. இந்தா! இப்படி உட்கார்ந்து மெல்ல சாப்பிடு'' என்று வெகு அன்புடனும் பச்சாத்தாபத்துடனும் உபசரித்தான்.

வீதியிலுள்ள ஜனங்களில் சிலர் மதுசூதனனைப் பாராட்டினுர்கள். சிலர் கேலி செய்தார்கள். இந்தப் பிச்சைக்காரக் கழுதைகளுக்கு வேறுவேலை என்ன? இதே தொழில். பாட்டுப் பயித்தியங்கொண்ட இதொரு அஸமஞ்சம் யாராவது பாடுகிறவர்கள் அகப்பட்டால் போதுமே, சரணுகதி செய்துவிடும். வ்யாதிப்பிடித்த மூதேவியைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அவளுக்குச் சோற்றை

யும் போட்டு டம்ளரில் தண்ணியையும் கொடுத்து சொந்த மனிதர்களைப்போல் உபசரிக்கிறதே. ஐயோ! பித்துக்குளியே!'' என்றும் சிலர் பேசினார்கள்.

மதுசூதனின் மனத்தில் மட்டும் ஆனந்தம் பொங்கியது. அந்த பிச்சைக்காரியின் வயிறு குளிருவதுபோல் அவன் இதயம் குளிர்ந்தது. "நன்றாய் சாப்பிடு...அவசரப்படாதே...தண்ணீர் குடி... அம்மா! எங்கே, நேற்று நதிக்கரையில் பாடினாயே அந்தப் பாட்டை ஒருதரம் பாடேன்...ஒரே ஒருதரம் பாடு. ஆனந்தமாய்க் கேட்கிறேன்'' என்றான்.

பிச்சைக்காரியும், ஆத்மா திருப்தியடைந்த சந்தோஷத்துடன்,

ப்ரேமை நதியினில், பேரின்பவெள்ளம்
ப்ரேமாகாந்தனின் பிரியம்நிறை உள்ளம்
ப்ரேமையேமாந்தரின் பிணிதனைத் தள்ளும்
ப்ரேமையே ஆனந்த நிலேதனைக்கொள்ளும்
ப்ரேமையே உலகின் இன்பப் பிரகாசம்
ப்ரேமையே வாழ்க்கையில் பிணைந்திட்ட நேசம்
ப்ரேமையே பக்தியைப் பெருக்கும் உல்லாசம்
ப்ரேமையே சந்தோஷ மலரின் விகாசம்.

என்று பாடியபோது மதுசூதனனின் உடல் சிலிர்த்தது. "ஆஹா ஹா! என்ன கானம்! என்ன ஆனந்தம்...தாயே! நீ வெறும் பிச்சைக்காரியல்ல. நீ ஓர் வனதேவதை. நீ ஸரஸ்வதியின் வரம் பெற்ற நங்கை'' என்று அவன் இதயத்தின் உணர்ச்சியை அப்படியே எடுத்துக் கூறும்போது அருகிலிருந்தவர்கள் கபகபவென்று சிரித்தார்கள்.

பிள்ளையைப் பார்க்கவந்திருந்தவர்கள் மதுசூதனன் திடீரென்று எழுந்து ஓடியதையும், சற்று நேரத்திற்கெல்லாம் லக்ஷ்மி கத்தியதையும், உடனே ராஜம் ஓடியதையும் கண்டதும் வீதியில் பாட்டுக் குரல் கேட்டதும், அவர்களுக்கு ஒருவிதமான சந்தேகத்தைக் கொடுத்தது. உடனே அவர்கள் எழுந்து வீதிக்கு வந்து பார்த்து வியப்பும், வெறுப்பும் கொண்டு, "ஐயோ! தலையெழுத்தே! இத்தனை அருமையான பிள்ளையை வைத்துக்கொண்டுதானா ஆயிரக்கணக்கில் அளந்து பணம் கேட்டீர்கள்? பயித்தியக்காரப் பிள்ளைக்கே நீங்கள் இத்தனை கேட்டபோது நல்ல பிள்ளையாக இருந்தால் பெண் வீட்டாரை அப்படியே கொள்ளைதான் அடித்து ஏப்பம் விட்டுவிடுவீர்

கள்போலிருக்கிறது. பிள்ளை அழகைப்பாரு. சீக்கிரத்திலேயே பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியதுதான்'' என்று பரிகாஸமாயும், அலக்ஷியமாயும் கூறிக்கொண்டே போய்விட்டார்கள்.

இந்த செய்கை ராஜம்மாளின் மனத்தில் உறுத்தியது. ஒரு கேடு கெட்ட பிச்சைக்காரியைக் கூட்டிவைத்துக்கொண்டு பெரிய கூட்டத்தையும் கூட்டியிருப்பதைக் காண அவளுக்குச் சற்றும் சகிக்கவே இல்லை. தடதடவென்று உள்ளே போய் ஒரு குடத்து நிறைய ஜலத்தைக் கொண்டுவந்து சற்றும் தியங்காமல் பிச்சைக்காரியின் தலையில் கொட்டி "தடி முண்டே! ஒரு வண்டி வ்யாதியை உடம்பில் வைத்துக்கொண்டு வீடு வீடாக வந்து அந்தக் கொடிய தொத்து நோயை ஒட்டவைக்கவா பார்க்கிறுய்? தெருவோடு போகாமல் இப்படியா அலைவது? ராக்காலமில்லை. இருட்டில்லை. இதென்னத் திமிரு உனக்கு? நீ தொட்ட டம்ளரை எரித்தாலுங் கூடப் போதாது....எழுந்து போடீ மானம் போகிறது'' என்று தாறுமாறுமாகத் திட்டினுள்.

மதுசூதனனின் மனது அனலிடை மெழுகென உருகியது. "ஐயோ பாவம் அம்மா! அம்மா! பிச்சைக்காரியை ஏனம்மா இப்படிக் கொடுமை செய்கிறுய்? அவளுடைய கொடிய பசியின் வேதனை தாங்காது ஒரு கவளம் அன்னம் கேட்டாள். மனிதனுக்கு மனிதன் பசிக்கொடுமையை அறிந்து ஒரு வாய் அன்ன மளிப்பதை மனிதனே வெறுக்கலாகுமா! இது தருமமா!'' என்று அவன் கூறி முடிக்கு முன்பு ராஜம்மாளும், திருவேங்கடமும் மதுசூதனனை பல வந்தமாகக் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே போய் வீதிக்கதவைத் தாளிட்டுவிட்டார்கள்.

அடுத்த விநாடியே மதுசூதனனை அவன் விடுதியில் தள்ளி விட்டு "அடேய்! இதுதான் நான் கடைசீதரமாகச் சொல்கிறேன். என்னுடைய போதாக் காலத்திற்குத்தான் இத்தகைய அசட்டு முண்டத்தை நான் கையேந்திப் பிச்சை வாங்குவதுபோல் வாங்கிக் கொண்டு அவஸ்தைப்படுகிறேன். நீ இனிமேல் சிறிய குழந்தை யல்ல. விவாகத்தைச் செய்துகொண்டு குடும்பம் நடத்தும் பொருப்பு ஏற்பதை விட்டு இம்மாதிரி மானக்கேடாக நடந்து கொள்வது எனக்கு ப்ராணன் போவதுபோலிருக்கிறது. இனிமேல் இந்த அசட்டுத்தனத்தைத் தாளவே முடியாது. இனியும் நீ இம்மாதிரி இருந்தால் நான் தற்கொலைதான் செய்துகொள்ள

வேண்டும். பச்சாத்தாபப்படுவதற்கும் தருமம் செய்வதற்கும் ஒரு எல்லை இல்லையா! உன்னைப் பார்க்கும் எல்லோரும் உன்னைப் பரிகஸித்துச் சிரிக்கும்போது என்னுயிரல்லவா துடிக்கிறது? இனி மேல் இம்மாதிரி செய்யாதே! நமது கௌரவத்தைக் குலைக்காதே. உனக்குப் பெண் கொடுப்பதற்காகப் பார்க்கவந்திருக்கும் மனிதர்களின் முன்னிலையில் இப்படியா மனக்கேடாய் நடந்துகொள்வது?' என்று அவர் ஆத்திரத்துடன் கூறிமுடிக்குமுன், மதுசூதனன் பேசத்தொடங்கி, "அப்பா! உத்தமமான காரியங்களைச் செய்வதெல்லாம், கேவலமாகத் தோன்றினால் அது என் குற்றமா! பெண் கொடுக்க வரும் மனிதர்களிடம் நான் எனது சுதந்தரத்தை இழந்து அடிமைபோலிருக்கவேண்டுமா!' பெண்ணைப் பண்ணிக்கொண்ட மறுநாளே நான் அவர்கள் ஆட்டிவைக்கிறபடி ஆடும் பம்பரமாக இருக்கவேண்டுமா? அப்பா! நான் சொல்வதைக் கேளுங்கள். எனக்குக் கல்யாணமே வேண்டாம்; அப்படி உங்களுடைய திருப்திக்காகச் செய்துகொண்டாலும் சில மடையன்கள்மாதிரி 'மாமியார் பாதமே கதி' என்றும், 'பெண்டாட்டியாத்தே பேராத்தே' என்றும், மாமியார் வீட்டுப் பூனைக்குட்டிக்கு முதல் சலாம் போட்டுக் கைகட்டி வாய்ப்புதைத்து, தன் சொந்த மக்கள் மனிதர்களைப் புறக்கணித்து அலக்ஷியம் செய்து மனத்தை நோகவைக்கும் வழியில் நான் ஒரு நிமிடங்கூட வாழமாட்டேன். எனக்கு அத்தகைய பிசாசுகளின் கூட்டத்தில் சம்மந்தமும் வேண்டாம்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

ராஜம் :—அடேயப்பா! இத்தனை புத்திசாலித்தனமாகப் பேசிவிட்டாயே! இப்போது உங்கப்பா, உன் சித்தப்பா, உன் அண்ணன் கிட்டு, இவர்களெல்லாம் சலாம் போடும் முட்டாள் கூட்டம் என்று நீ மதிப்புரைக் கொடுக்கிறாயா?...சரி! அப்படித்தானிருக்கட்டும். அவர்கள் கோஷ்டியில் நீயும் சேர்ந்துவிடு. போதும், வீண் விதண்டாவாதம் செய்யாதே. அனாவசியமாய் வெளியே போகாதே. வீண் அவமானத்தையெல்லாம் விலைக்கு வாங்காதே— என்று உபதேசம் செய்து அவனை அப்படியே அடக்கிவிட்டாள். அதற்குமேல் என்ன செய்வான் பாவம். கட்டுக்கடங்காது மனம் தவித்தது. இவ்வுலகத்தின் அதியத்புத விநோதங்கள் அவனைக் குழப்பின. பெருமூச்சுக்கள் துரத்தின. என்ன உலகம்! என்ன மாயை!

# 6

பெருமூச்சுகள் துரத்தின. என்ன உலகம்! என்ன மாயை! யார் யார் தலையெழுத்து எப்படி இருக்கிறதோ! அந்த ஆச்சரியமான ரகஸ்யத்தை அறியாதிருக்கும்போதே உலகம் அகங்காரமும், மமகாரமும், தலைக்கிறுக்கும் அதிகப்பட்டுக் கூத்தாடுகிறது. பாரமார்த்திகம் நிறைந்த வேதாந்திகள் கிடைப்பதே துர்லபமாக விருக்கிறது. கொஞ்சம் நஞ்சம் இருக்கும் ஞானமும் இத்தகைய மதிசூன்யர்களின் தொந்தரவினால் அடியோடு அழிந்துவிடும் போலிருக்கிறதே! என்ன செய்வேன்?'' என்று மதுசூதனன் தனக்குள் எண்ணித் துக்கித்தான். வீட்டைவிட்டு வெளியில் போகாது கைதியைப்போல் உட்கார்ந்திருக்க அவன் மனம் சற்றும் சம்மதிக்கவே இல்லை. பெற்றோருக்கு மீறி நடக்கவும் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. வெளியில் போவதும் வருவதுமாய் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான்.

திருவேங்கடம் முன்பு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தவரிடம் சென்று மீண்டும் எப்படியாவது கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டார்.

தனிகர் :—ஐயா! உம்முடைய மரியாதைக்காகவும் நன்மைக்காகவும் இதுகாறும் கொடுத்து வந்தேன். இனிமேல் நீர் கேட்பதில் பயனே இல்லை. உபகாரச்சம்பளம் கொடுத்ததற்குப் பலன் அவர்கள் அதனால் நன்றாகப் படித்து மேன்மேலும் விருத்திக்கு வந்தால் திருப்தியாயிருக்கும்.

திரு :—ஐயா! வாஸ்தவம். நீங்கள் சொல்வதை நான் நன்கறிவேன். ஏதோ சகவாஸ தோஷத்தின் கேட்டால் இம்முறை பரீக்ஷை போய்விட்டது. இனிமேல் அம்மாதிரி போகாது. கட்டாயம் படித்துத் தேறிவிடுவான்.

தனிகர் :—ஓய்! இனிமேல் இந்த பல்லவியை நான் நம்பமாட்டேன். சகவாஸமாவது கத்திரிக்காயாவது? இவனுடன்கூட இருக்கும் பிள்ளைகளெல்லாம் இப்படியா தத்தாரியாய்த் திரிகிறார்கள்? ஒன்று படித்தால் அதே கவனமாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும். இல்லையா! ஒரே நிலையாய் சங்கீதக் கலையை சாஸ்திர பத்ததியாக அப்யாஸிக்கவேண்டும். இரண்டுங்கெட்டான் நிலைமையில் அவன் ஏதுங்காணும் உருப்படுவது? பஜனை சபாவில்

நடந்த ஸ்ரீராமநவமி உத்ஸவம் பத்து நாட்களும் ஓயாமல் அவனை அங்கு பார்த்தேன். கோயில் ப்ரம்மோத்ஸவத்தில் புதிய நாயனக்காரன் வந்திருந்தானல்லவா, அந்த பத்துநாளும் அங்கு பார்த்தேன். இப்படித்தான் மற்ற பிள்ளைகள் இருக்கிறார்களா ?

திரு :—வாஸ்தவம். நான் எத்தனையோ விதத்தில் கண்டித்தும் ப்ரயோஜனப்படாது போகிறது. இம்முறை எப்படியும் இம்மாதிரி ப்ரவர்த்தகங்களின்றி பாஸ் செய்துவிடுவதாகச் சொல்லுகிறான். பெரிய மனது செய்து உதவி புரியவேண்டும்.

தனி :—என் சார் ! என்னுடைய பணம் ஒரு முட்டாளுக்கே செலவாவதென்றால் எனக்குப் பிடிக்கவே இல்லை. இன்னார் பணங் கொடுத்து உதவிசெய்தான்; அதனால் இன்னார் முன்னுக்கு வந்தார் என்றால் சந்தோஷமா, இப்படியானால் சந்தோஷமா ! நேற்று காலையில் நடந்த சம்பவம் உமக்குத் தெரியுமா !

திரு :—ஒன்றுமே தெரியாதே ! என்ன சமாச்சாரம் ?

தனி :—யாரோ ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் தெருவில் திரிந்து பிச்சை எடுத்து அவன் விதியைத் துலைத்து வந்தான். அவன் நன்றாகப் பாடுவான். அவன் ஒரு திக்கில்லாப் பரதேசி. பிச்சைக்காரர்களில் சிலரே அவனுக்கு உதவி செய்துவந்தார்களாம். அவன் அனாதைப் பிணமாக நடுத்தெருவில் ஓர் மரத்தடியில் செத்துக் கிடந்தான். அந்தப் பக்கத்திலுள்ள சில பிச்சைக்காரர்களும் வழிப்போக்கர்களும் வீதியில் போகிறவர்கள், வருகிறவர்களிடம் யாசகம் கேட்டு பிணத்தை அடக்கம் செய்வதற்காக யாசித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அஸம்பாவிதமான இடத்தில் உமது குமாரனுக்கு என்ன வேலை! நீரே சொல்லும் பார்க்கலாம்.

திரு :—ஐயையோ ! அவன் அங்கு வந்தானா என்ன! என்ன செய்தான் ?

தனி :—என்ன செய்தானா ! நானும் இதை வேடிக்கை பார்ப்பதற்காகவே காரில் உட்கார்ந்தபடியே கவனித்தேன். பிணத்தருகில் சென்று சற்றுக் கண்ணீர் விட்டான். தன் சொந்த மனிதர்கள் செத்தால்கூட அழாத இக்காலத்தில் அந்த அனாதைப் பிணத்திற்குப் புலம்பித் தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து, அதை விற்றுக் கிழவனின் கிரியைகளைச் செய்யும்படித்திட்டமிட்டான்.

திரு :—என்ன !...தன் மோதிரத்தைக் கொடுத்தானா !... அனாதைப் பிணத்திற்கா ?...

தனி :—ஆமாம். ஸ்வாமி! ஆமாம். அனுதைப் பிணத்திற்குத் தான் இத்தனை ஆதரவு? அவன் கொடுத்த மோதிரத்தை ஒரு ஆள் விற்க விலை கூவினுன். அதை நானே ஒன்றுக்குப் பாதி விலை கொடுத்து வாங்கினேன்.

திரு :—ஆஹா! என்ன ஆச்சரியம்! நீங்கள் மோதிரத்தை வாங்கினீர்களா! இம்மாதிரியான அனுதைப் பிணங்களை எடுத்து அடக்கம் செய்யவேண்டிய வேலை நகரசபையாருடையதல்லவா! அவர்களெல்லாம் தூங்கினுர்களா! நகரத்தின் முக்யமான வேலைகளில் இதுவும் ஒன்றல்லவா!

தனி :—சார்! நீங்கள் பேசுவதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா! நகரசபையினரின் ஆர்ப்பாட்டமெல்லாம் தேர்தல் காலத்தில் மட்டுந்தான் என்பதையும், பிறகு தம் சொந்த வரும்படிக்கு ஏதாவது வழி கிடைக்குமா என்று வழி பார்ப்பதுதான் வேலை என்பதையும் மறந்துவிட்டீரா! நகரசபையின் பரிபாலனம் நல்ல உபகாரமான முறையில் இருக்குமாயின் கூடிய வரையில் அங்கஹீனர்களாகிய பிச்சைக்காரர்களுக்குத் தனி விடுதி ஏற்படுத்தி அவர்களை ரக்ஷிக்காதா! அவரவர்களால் முடிந்த தொழிலைச் செய்வதற்கான சாதனமாவது உண்டாக்கக்கூடாதா! கொடிய வியாதியையுடைய பிச்சைக்காரர்களின் கூட்டம் நாளைக்கு நாள் பெருகுவதால் அதனுல் அந்த வியாதி தொத்திப் பரவி நகர ஜனங்களையல்லவா நாசம் செய்யும்? அதற்கென்ன வழி செய்துவிட்டார்கள் சார்! யாருக்கு கண்ட்ராக்டு விடலாம்? எந்த புதிய வரியைப் போடலாம். எப்படிப் பணம் சுரண்டலாம் என்று பதவிக்கும், பணத்திற்கும் வேட்டையாடும் இந்த கற்பனைக்கோட்டையூரிலா நகரசபையின் அமைப்புமாறும்?

திரு :—வரவர எல்லாம் அக்ரமம்; எங்கு பார்த்தாலும் ஊழல்.

தனி :—ஊழலாவது உருளைக்கிழங்காவது, அந்த விவகாரம் நமக்கெதற்கு? நகரசபையார் கவனிக்கவேண்டியதை அவர்கள் கவனிக்காத சமயத்தில் பொதுஜனங்களாவது முயல்வதை நாம் பாராட்டவேண்டுவதுதான். அதை இல்லை என்று சொல்லவில்லை. அதற்கான பெரியவர்களும், தகுந்தவர்களும் இருக்கையில் படிக்கும் சிறிய பையனுகிய இவனுக்கு என்ன வேலை என்கிறேன். அதோடா நின்றுன்?

திரு :—ஐயோ! இன்னும் என்ன செய்தான்? எனக்கு மனத்தில் ஏதோ வேதனை செய்கிறதே.

தனி :—உம். பகவான் உமக்கு ஒரு தொந்தரவும் கொடுக்காதிருக்கையிலேயே நீராக உபத்திரவத்தை சட்டப் பூர்வமாக விலைக்கு வாங்கிக்கொண்டீர்கள். வாங்கத்தான் வாங்கினீர்களே! அது நல்லதாயிருக்கக்கூடாதா! உமது விதி. அந்தப் பிணத்திற்குத் தன் மோதிரத்தினுல் கிடைத்த பணத்தைக்கொண்டு ராஜபோகமாய் சாவுக்கிரியைகள் நடந்ததுமட்டுமில்லாமல் பிணத்தைத் தூக்கிச் செல்லும்போது தானும் ஒரு பக்கம் தூக்கிக்கொண்டு பாடியவாறே சென்ருன்.

திரு :—என்ன! என்ன! பிணம் தூக்கினுனு! நிஜமாகவா!

தனி :—பதருதேயும் ஸ்வாமீ! நான் சொல்வது நிஜமானதா! விளையாட்டானதா! என்பது நாளை தெரிந்துவிடுகிறது. உயர் குலத்துப் பையன் ஒருவன் ஒரு நாடோடி பிச்சைக்காரப் பிணத்திற்கு இத்தனை உதவி செய்து பிணத்தையும் தூக்குவது என்ருல் அது எத்தகைய ஆச்சரியமான விஷயமய்யா! ஜனங்கள் அப்படியே பிரமித்துவிட்டார்கள். பலபேர் அவன் பிணந்தூக்கிச் சென்ற காக்ஷியைப் புகைப்படம் பிடித்திருக்கிருர்கள். அனேகமாய்ப் பத்திரிகைகளில் அப்படங்கள் வருமென்றே நினைக்கிறேன்.

திரு :—ஐயோ! கேட்கக்கேட்க என்னை என்னவோ செய்கிறதே. பிராணனை விட்டுவிடலாம்போலிருக்கிறது. நான் என்ன செய்வேன்?

தனி :—செய்வதாவது சுண்டைக்காயாவது, இனிமேல் இப்பயலைப் படிக்கவைக்க வேண்டுமென்ற ஆசையை விட்டுவிடும். சரியானபடி ஒரு கடுமையான வேலையைப் பார்த்து அதில் அமர்த்திவிடும். தகுந்த விடத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து விவாகத்தைச் செய்து கால்கட்டுப் போட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. இம்மாதிரி யாரையும் உபகாரச் சம்பளமும் ஒத்தாசையும் கேட்டு அவமானப்படவேண்டாம். இனி யாரும் கொடுக்கமாட்டார்கள். இதோ இந்த மோதிரத்தை உமக்காகத் திருப்பிக் கொடுக்கிறேன். அந்த அனுதைப் பிணத்திற்கு நான் உதவி செய்ததுபோலாகட்டும். இந்தாரும்—என்று கூறியபடியே தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார்.

பெருந்தன்மையும், உதாரகுணமும் நிறைந்த அப்பெரியாரின் செய்கையினுல் அதிகத் திருப்தியடைந்து மனம் பூரித்த திருவேங்

கடத்திற்கு மோதிரத்தை வாங்கலாமா கூடாதாவென்ற யோசனை பிறந்தது. தன் கையிலோ பணமில்லை. ஆகையால் தயக்கம் உண்டாகியது.

மயங்குவதைப் பார்த்த தனிகர், "சார்! நீங்கள் மயங்குவது எனக்குத் தெரியும். நான்தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே! அந்த தர்மத்தில் நான் பங்கு எடுத்துக்கொண்டதாகவிருக்கட்டும். இதற்கு நான் பத்து ரூபாய்கூடக் கொடுக்கவில்லை. உமது பொருளை நீர் எடுத்துக்கொண்டுபோம். இதற்கு யோசனை வேண்டாம்" என்று கூறியபடியே கையில் வைத்துவிட்டார்.

அதற்குமேல் ஒன்றும் பதில் பேசமாட்டாது, விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினர். தன் மகன் செய்துள்ள ஹீனமான வேலையைக் கேட்டு மனம் புழுங்கியது. 'இத்தனை தைரியமும் பிறந்துவிட்டதா! செய்த காரியத்தை ஒரு வார்த்தை சொல்லாமலும் இருந்துவிட்டானே!' என்று ஆத்திரம் பொங்கியது. வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டித்துத் தண்டிப்பதற்கும் மனம் துணிந்துவிட்டார். இதயம் துடித்தது. கோபத்தால் முகம் சுளித்துச் சிவந்தது. கண்களில் தீப்பொறிகள் பறந்தன.

## 7

கண்களில் தீப்பொறிகள் பறந்தன. இதயம் துடித்தது. கோபத்தால் முகம் சுளித்துச் சிவந்தது. "நன்றாகப் பார். அம்மா! உன் அருமை மகனின் சேவையைச் செவ்வையாகப் பாரு. இதென்ன குடிகேடித்தனமோ! இதென்ன துணிச்சலோ! பாரடி யம்மா! பாரு. பெத்தவயிற்றுக்கு சீவரத்துப் பிரண்டையும், சேலத்து மிளகாயும் அரைத்துக் கட்டினாலும் தீராது. வளர்த்த கைக்கு விலங்குதான்வேண்டும். பிணந்தூக்கும் கண்றாவியை யார் சகிப்பார்கள்?" என்று கூறிக்கொண்டே லக்ஷ்மி ஒரு பத்திரிகையைத் தன் தாயாரிடம் மேற்குறித்த ஆக்ரோஷத்துடன் காட்டினாள்.

பத்திரிகையில் வெளியாகியுள்ள புகைப்படத்தில் பிணத்தை மதுசூதனன் தூக்கிச் செல்லும் காக்ஷி அப்படியே இருந்ததுகண்டு

யாருக்குத்தான் மனங் கொதிக்காது? ஏற்கெனவே வெறுப்பும், கோபமும் கொண்டுள்ள ராஜம்மாளுக்கு இதைக்கண்டதும் பின்னும் பதின்மடங்காய்ப் பொங்கியது. ஐயோ! வெட்கக்கேடே! பிணந்தூக்கியாய் அலைவதற்கா நான் இவனைக் கையேந்தி வாங்கி வளர்த்தேன்? இதென்ன வயித்தெரிச்சல் படமடீ!" என்று ஆவேசத்துடன் கூறியவாறு வாங்கிப் பார்த்தாள்.

லக்ஷ்மி ஏளனமாக நகைத்துக்கொண்டே "வயிற்றெரிச்சல் படமா! அதன் கீழ் எழுதியிருக்கும் விமர்சனத்தைப் படியேன். சந்தோஷம் பொங்கி வழியும். இதோ பார்!" என்று காண்பித்தாள். ராஜம்மாள் வருத்தமும், கோபமும் பொங்கியவாறு அதைப் படிக்க வாரம்பித்தாள்.

## ஆச்சரியமான சம்பவம்!
## ஒரு சுத்த வீரனின் பரிதாபச் செய்கை!!

பிச்சை எடுத்துத் தன் காலத்தைக் கழித்து வந்த வீரப்பன் என்கிற பிறவிக்குருட்டுப் பாடகன் முந்தாநாள் இரவு இவ்வுலகை விட்டு மறைந்தான். அனாதைப் பிணத்தை அடக்கஞ் செய்வதற்கு சில பிச்சைக்காரர்கள் பணம் வ்யாபரித்தார்கள். அச்சமயம் மிகவும் இளகிய மனத்தையுடையவரும், சங்கீதத்தில் அபாரமான ஆவலும், சிறிது பாண்டித்தியமும் உடையவருமான ஸ்ரீமான் டி. மதுசூதனன் என்பவர் அவ்வழியே செல்கையில் இந்த கோர சம்பவத்தைக் கண்டு மனமுருகித் தன் கை மோதிரத்தை விற்று, அந்தப் பிறவிக்குருட்டுப் பாடகனுக்கு சவச்சடங்குகளைச் செய்வித்ததுமன்னியில், அந்த அனாதைப் பிணத்தினிடம் சற்றும் வெறுப்போ, தான் ஜாதியில் உயர்ந்தவன் என்கிற கர்வமோ கொஞ்சமும் இல்லாது அந்த சுத்த வீரன் பிணத்தை ஒரு பக்கம் தானே தூக்கிச் செல்லும் அருமையானதும், ஆச்சரியமானதுமான காக்ஷியைப் படத்தில் பாருங்கள்.

அந்த சமகிலைப் பார்வையுடைய உத்தமன் பிணத்தைக்கண்டு மனமுருகிப் பேசிய சில வார்த்தைகள் பொதுஜனங்களின் உள்ளத்தை உருக்கி ஒரு பெரிய புரட்சியைக் கிளப்பி ஒரு சிறிய மாறுதலையும் உண்டாக்கியது.

அவர் கூறியதாவது:—

"வீரப்பா! நீ வந்த காரியம் முடிந்துவிட்டது. உனக்கு உலகம் எப்படி சூன்யமாகவிருந்ததோ, அப்படி உள்ளமும் சூனியமாக இல்லாது சதா பகவானைப் பாடித்துதித்து சஞ்சலமும், விகார எண்ணங்களும் இல்லாத நிலையில் உன் காலத்தை ஆனந்தமாய்க் கழித்துவிட்டாய். நீ உலகத்தையும், கள்ளம், கபடு, சூதுவாது, பொறாமை, அசூயை, க்ஷாத்திரம், முதலிய துர்க் குணங்கள் நிறைந்த மனிதர்களைக் கனவிலும் பார்க்கவில்லை. ஆனால் ப்ரதிபலனைக் கோராது மேகம் மழையை உதவுவதுபோல் நீ, உனது கண்டத்திலிருந்து கொட்டும் கானமழையைப் பொழிந்து எல்லோரையும் இன்ப மூட்டிப் பரவசமுறச் செய்தாய். என்போன்ற சங்கீதப் பித்தர்களை இன்பசாகரத்தில் ஆழ்த்தினாய்.

உன்னைக் கடிந்து வெறுப்பவர்களும் உன் சங்கீதாம்ருதத்தினால் உள்ளம் உருகியதை நான் கண்ணுறக் கண்டிருக்கிறேன். நீ நிம்மதி உலகை யடைந்துவிட்டாய். இந்த கபட உலகத்தை விட்டுப் போவதற்கு என்போன்ற அதிர்ஷ்டஹீனர்களுக்கு எத்தனை யுகங்களாகுமோ! 'செத்த பிணத்தருகே சாம்பிணங்குந்திக் கத்துதைய்யோ!' என்று பட்டினத்தடியார் பாடியதுபோல் நானும் பாடுகிறேன்.

உன்னுடைய அம்ருதகானம் எங்கே மறைந்ததோ! கானமழை பொழிந்த கண்டம் சற்று நேரத்தில் எரிந்து சாம்பலாகப்போகிறது. எல்லோரையும் சமமாக நினைத்திருந்த உள்ளம் இன்னும் சற்று நேரத்தில் வெந்து படு சூரணமாகப்போகின்றது. வாழ்வும் தாழ்வும் ஒன்றான நிலைமையை அடைந்துவிட்ட உன்னிடமா வேற்றுமை? உன்னிடமா வித்யாஸம்? இல்லை. இல்லை. கடவுளுக்கு முன்பு நாம் எல்லோரும் ஒன்று. அவன் சன்னிதானத்தில் உயர்வேது, தாழ்வேது? நீ செத்த பிணம். நான் சாகாப் பிணம். நீ உலகின் அக்ரமத்தையறியா தத்துவ நிலையை அடைந்துவிட்டதால் என்னைவிட ஒருபடி மேன்மை பெற்றுவிட்டாய். தாதா! உன் ஆத்மா சாந்தியடைக"

என்றெல்லாம் இன்னும் ஏதேதோ கூறியதைக்கேட்டு யாருடைய மனதுதான் உருகாது? எல்லோரும் அந்த வாலிபனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். பகவான் அவருக்கு சகல மங்களமும் கொடுத்துக் காப்பாற்றுவாராக. அவருடைய பரிசுத்தமான இதயத்துடன் செய்த ஸேவையை எல்லோரும் பின்பற்றுவார்களாக."

என்றிருந்ததைப் படித்ததும் ராஜம்மாளின் வயிற்றில் சகிக்கவியலாத சங்கடம் உண்டாகியது. "எந்த கோயிலில் சுற்றி இத்தகையப் பிணந்தூக்கிப் பிள்ளையைக் கையேந்தி வாங்கினேனே! என் மானம் போகிறதே!" என்று பல்லைக்கடித்துக்கொண்டு திட்டினாள்.

அதே சமயம் திருவேங்கடம் "மானம் போறது என்று சொல்லாதேடீ! மானம்போயே போய்விட்டது. இனி தம்பிடி விலை கொடுத்துக் கடையில் வாங்கவேண்டியதுதான். ஒரே வழியாய்க் குழந்தை இல்லை என்கிற குறையுடன் இருந்திருந்தால் இந்த அவமானப்படவேண்டாமே....ஏதோ ஒரு அநாமதேயப் பிணத்திற்காக தன் கை மோதிரத்தை வித்துச் சவச் சடங்கு செய்தானுமே... இந்த வெட்கக்கேட்டிற்கு என்ன செய்வது?"...என்றார்.

ராஜ :—என்ன! என்ன! மோதிரத்தை வித்தானா இப்படியுமா மூளை கலங்கிவிட்டது! ஐயையோ! இதோ! பிணந்தூக்கும் கண்ராவியைப் பாருங்களேன்...

திரு:—ஊஹூம்...அதுவும் வந்துவிட்டதா! எல்லா பரிபவத்தையும் கேள்விப்பட்டேன். இனிமேல் என்னால் இந்த சங்கடங்களைத் தாளமுடியாது. உடனே ஒரு வழி செய்து அவனைச் சரியானபடி வைத்தால்தான் பிழைக்கலாம். இல்லையேல் ப்ராணன் போக வேண்டியதுதான்.

ராஜ :—'சமநிலைப்புத்தி! சமநிலைப் புத்தி' என்று இந்த பயித்தியம் யாரையாவது ஒரு ஜாதிவிட்டு ஜாதிப்பெண்ணை மணந்து கொண்டு திடீரென்று ஒரு நாளைக்கு மாலையுங் கழுத்துமாய் பத்திரிகையில் காக்ஷி கொடுப்பான். அதுவரையில் நாம் விட்டுவிட்டுப் பிறகு கையை முறிப்பதில் உபயோகமில்லை. ஒரு கால்கட்டைக் கட்டிவிட்டால்தான் அவன் குறியாயிருப்பான் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆதலால் முதலில் அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இனிமேல் நாம் ஒரு க்ஷணநேரங்கூட சும்மா இருக்கக் கூடாது—என்று கர்ஜித்தாள். அந்த த்வனியின் எதிரொலி கட்

டடம் முற்றும் சுற்றிக்கொண்டு கும்மென்ற சப்தம் எழுந்தது.

நாட்கள் சகடக்கால்போல் சுழன்றுவிட்டன. ராஜம்மாளும் திருவேங்கடமும் சேர்ந்து தமது சங்கல்பப்படி ஒரு பெண்ணைப் பிடித்து மதுசூதனனுக்கு நல்ல சுபமுகூர்த்தத்தில் அதிக ஆடம்பரமின்றி சாஸ்திரோக்தமாய் விவாகத்தைச் செய்துவிட்டார்கள். மதுசூதனன் எத்தனை தடுத்தும் அவன் இஷ்டம் சாயவில்லை.

ராஜம்மாளின் விருப்பப்படியே வரதக்ஷிணையும் சீர்வகைகளும் ஏராளமாகச் செய்துகொடுத்து ஒரு பெண் கிடைத்தால் அவளுடைய சந்தோஷத்திற்கு எல்லையுண்டா! மருமகளை வீட்டிற்குக் கொண்டு வைத்துக்கொண்டு குலாவவேண்டுமென்ற ஆசையும் பிறந்தது. மதுசூதனனுக்கோ தன் மனைவி என்கிற ஒரு பாசமோ, அன்போ எள்ளளத்தனையும் உண்டாகவில்லை. பெண் மகா ரூபசுந்தரி என்று பிறர் புகழ்ந்தது காதில் விழுந்ததேயன்றி அவன் என்னவோ பார்க்கவோ, அந்த மங்கையிடம் பேசவோ இல்லை.

அந்தப் பெண்ணும் மகாமிலிடரியாய், வணங்காமுடி மங்கையாயிருந்தாளேயன்றி மாமியார்வீட்டாருக்கு அடங்கி ஒடுங்கி உலகத்தவர்களைப்போல் நடந்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணமே இல்லாது கர்வியாய் இருந்தாள். மதுசூதனனுக்கு நலங்கு வைக்கும்போதுகூட அப்பெண் மறுத்துப் பிடிவாதம் செய்துவிட்டது.

எப்படியாவது கல்யாணமாகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்கிற ஒரே எண்ணத்தால் கல்யாணத்தை முடித்துவிட்டதோடு வரதக்ஷிணைப் பணத்தில் லக்ஷ்மிக்கு வைரத்தோடு, திருகு முதலிய நகைகளைச்செய்துபோட்டுச் சந்தோஷமாகப்பார்த்துமகிழ்ந்தார்கள்.

'ஒன்று நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும்' என்பது எங்காவது பொய்யாகுமா! 'பெருமாள்' என்ற பெயர்மாறி, 'பெரிய பெருமாள்' என்று ஆகியதுபோல், மதுசூதனனைத் திருத்துவதற்காகச் செய்யும் காரியம் பின்னும் அதிகமான அபிவிருத்தியில் கொண்டுவிட்டது. அதாவது அவனுக்கு வேண்டிய சில பக்தர்களைக் கூட்டிக்கொண்டு ஒரு சிறிய பஜனை சபை ஸ்தாபித்துவிட்டான். சதாசர்வகாலமும் பஜனைமடத்திலேயே இருக்கவாரம்பித்ததில் சாப்பாட்டுக்கு வீட்டிற்கு வருவதும் பஞ்சமாகிவிட்டது.

எப்போதும் அவன் தன்போக்காக அலைந்துகொண்டிருந்தவனை மடக்கிப்போட நினைத்ததற்கு எதிர்முறையாக வீட்டிற்கு வருவதே கஷ்டமாகிவிட்டதென்றால் பெரியவர்களின் கவலையும்

கோபமும் பெருகுவதைக் கூறவேண்டுமா! ஆறும் மாதம் தீபா வளிக்குச் சம்மந்தி வீட்டிற்குச் சென்று ஏராளமான பகுமானத் தைப் பெற்றுவருவதற்கு ராஜம்மாள் துடித்தாள். சாமியாரைப் போல் மதுசூதனன் சதா 'ராமா கிருஷ்ணு! கோவிந்தா! சங்கரா! சம்போ!' என்று கூறியவாறு உட்கார்ந்திருந்ததைக் காணவே பற்றிக்கொண்டது. எத்தனையோ விதத்தில் மதுசூதனனிடம் பேசி அவனைச் சரிப்படுத்தி தீபாவளிப்பண்டிகைக்கு மாமியார் வீடு போகக்கிளம்பி விட்டார்கள். பிள்ளைவீட்டுச் சம்மந்திகளின் ஆர வாரமும் பிகுவும் கேட்கவேண்டுமா! அட்டகாஸத்துடன் போயிறங் கினுர்கள். வழக்கப்படியே சம்மந்திகளுக்கு மரியாதை நடந்தது.

ஆனுல் மதுசூதனன் ஒருவரிடமும் கலந்துகொள்ளாமல் தனி யாக ஒரு அறையில் உட்கார்ந்திருந்தான். மதுசூதனனின் மாமனு ருக்குத் தற்காலத்து மாப்பிள்ளைகளைப்போல் நாகரிகமாயும் பேஷனு யும், நவநாகரிக முறைப்படிக்கு தற்கால தம்பதிகள் உல்லாஸமாகப் பேசுவதும் உலாவச் செல்வதும் விளையாடுவதும்போல் இவர் களும் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

மதுசூதனன் உள்வழியே எட்டிப் பார்க்காதிருந்ததால் சற்றுக் குறையாகவே இருந்தது. சங்கீதப் பித்துகொண்ட மதுசூதனனை காந்தம்போலிழுக்கும் கருவிபோல் உள்ளிருந்து கிராமபோன்பாடும் த்வனி வந்தது. அதைக்கேட்டு மெய்ம்மறந்தவனுய் அந்த கானம் வரும் திக்கில் தானே சென்முன்.

ஒரு சதுரமான ஹாலில் நடுவில் மேஜைமீது பெரிய கிராம போன் வைத்திருந்தது. அங்கு யாரும் மனிதரே காணப்படவில்லை. பிளேட்டு மட்டும்,

பாயுமொளி நீயெனக்கு பார்க்கும்விழி நானுனக்கு;
தோயுமது நீயெனக்கு தும்பியடி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை வாழிநின்றன் மேன்மையெல்லாம்;
தூயசுடர் வானொளியே! சூறையமுதே கண்ணம்மா!
வீணையடி நீயெனக்கு மேவும்விரல் நானுனக்கு!
பூணும்வட நீயெனக்கு புதுவயிர நானுனக்கு;
காணுமிடந் தோறுநின்றன் கண்ணினொளி வீசுதடி;
மாணுடைய பேரரசே! வாழ்வுநிலையே கண்ணம்மா!
வானமழை நீயெனக்கு வண்ணமயில் நானுனக்கு;
பானமடி நீயெனக்கு பாண்டமடி நானுனக்கு;

ஞானவொளி வீசுதடி நங்கைநின்றன் சோதிமுகம்;
ஊனமறு நல்லழகே! ஊறுசுவையே கண்ணம்மா!
வெண்ணிலவு நீயெனக்கு மேவுகடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீயெனக்கு பாட்டினிமை நானுனக்கு; [கே;
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமிலை நின்சுவைக்
கண்ணின்மணி போன்றவளே! கட்டியமுதே கண்ணம்மா!

—பாரதி.

இதுமுற்றும் காதல் பாட்டாயினும் பாடலின் அழகு அவன் மனத்திற்கு ரமணீயமாயிருந்ததால் அவ்வறையில் போய் உட்கார்ந்தான். மூன்று நிமிடம் ஆனதும் பாட்டு நின்று விட்டது. மறுபடியும் யாரேனும் வந்து வைப்பார்களென்று எதிர்பார்த்திருந்தான். மூன்று நிமிடம் ஆயிற்று. ஐந்து நிமிஷமாயிற்று. ஒருவரும் வரவில்லை. என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கையில்,

காதலடி நீயெனக்கு காந்தமடி நானுனக்கு;
வேதமடி நீயெனக்கு வித்தையடி நானுனக்கு;
போதமுற்ற போதினிலே பொங்கிவருந் தீஞ்சுவையே;
நாதவடி வானவளே! நல்லவுயிரே கண்ணம்மா!

—பாரதி.

என்கிற பாட்டை யாரோ ஒரு ஆண்பிள்ளை மெல்லிய கட்டைக் குரலில் பாடுவது கேட்டுச் சற்று வியப்புற்று 'யார் பாடுகிறுர்கள்?' என்று அறிய ஆவலுண்டாகியது. தனக்குத் துணையாகப் பாடிக்கொண்டு பொழுதுபோக்க ஓர் துணை கிடைத்துவிட்டதாய்ச் சந்தோஷப்பட்டான். அப்போது இராக்காலமாகையால் ஒரு சாதாரண விளக்குதான் எரிந்துகொண்டிருந்தது.

அந்த ஊரிலுள்ள டெண்டுசினிமாவில் ஏதோ ஒரு நல்லபடம் வந்திருந்ததால் அதற்கு அமிஞ்சி டிக்கட்டில் சம்மந்திகளை அழைத்துக்கொண்டு பெண் வீட்டில் சிலரும் போயிருந்தார்கள். வீட்டில் அதிக சந்தடியே இல்லை. மதுசூதனன் இந்த மாதிரி காதல் பாட்டு யார் பாடுகிறுர்கள் என்று மெல்ல அந்த ஜன்னல் பக்கம் எட்டிப் பார்த்தான்.

அவன் கண்களையே அவனுல் நம்ப முடியவில்லை. தலையில் ஏதோ பெரிய மலை விழுந்துவிட்டதுபோல் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டுத் தலை சுற்றியது. கைகளால் தலையை இறுகப் பிடித்துக்கொண்டு தான் முதலில் உட்கார்ந்திருந்தவிடத்திற்கே வந்துவிட்டான். இந்த

உலகமே அப்படியே தலைகீழாய்ச் சுற்றி அலறுவதுபோல் ஒரு தோற்றம் உண்டாகி அவனைச் சித்திரவதை செய்தது.

விடிந்தால் தீபாவளி. மூலைமுடுக்குகளில் கிடந்த நாகஸ்வரத்தை எல்லாம் சுத்தம் செய்து எடுத்துக்கொண்டு எல்லா நாகஸ்வரக்காரர்களும் இரவு இரண்டுமணி முதல் தமது அருமையான கான மழையைப் பொழிந்து நித்திரையிலிருப்போர்களையெல்லாம் வெகு சுலபமாக எழுப்பவாரம்பித்தார்கள்.

ஸ்வஸ்வர சங்கீதமும் அபஸ்வர சங்கீதமும், பயமுறுட்டல் சங்கீதமும், பட்டாஸ் வெடிகளின் சப்தமும் ஒன்று கூடி ஊரையே கலகலக்கச் செய்துவிட்டது. எல்லோரும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடவாரம்பித்துவிட்டார்கள்.

மதுசூதனனின் மாமியார் வெகு சீக்கிரத்திலேயே எழுந்து மும்முரமாய் வேலை செய்தாள். மணி நாலடிப்பதற்குமுன்பு மாப்பிள்ளையை எழுப்புவதற்காகத் தன் கணவனை எழுப்பியனுப்பினுள்.

சம்மந்தியாத்து மரியாதை தடபுடலில் மதிமயங்கிய ராஜம் இன்னும் சற்று நேரத்திற்குள் கெட்டி சரிகைப் புடவை உடுத்திக் கொள்ளப்போகும் சந்தோஷத்தில் இரவு முற்றுமே தூக்கம்வராது உதயத்தை எதிர்பார்த்திருந்தாள்.

சம்மந்திஸ்வாமி மாப்பிள்ளையின் அறையில் சென்று பார்த்து விட்டுவந்து "அவர் அப்போதே எழுந்துவிட்டாரோ, படுக்கையில் காணவில்லையே" என்றுர். பல் தேய்க்கப்போயிருப்பதாக எண்ணியதில் அரைமணி சென்றது. எண்ணெய் தேய்க்கும் நேரமாகிவிட்டதால் மாப்பிள்ளையைப் பலமாகக் கூப்பிட்டார்கள். சந்தடியேயில்லை. வீடு முற்றும் தேடினுர்கள். எங்குங் காணுததால் ஒரே குழப்பமும், கலவரமும் உண்டாகிவிட்டன.

"ராத்திரி படுத்தவர் எப்படி மாயமாய் மறைந்திருக்கக்கூடும்? இதென்ன வேடிக்கை!" என்று எல்லோரும் தவிக்கிறுர்கள். ஒருவருக்கும் ஒன்றுமே தோன்றவில்லை. அக்கம்பக்கம் உள்ள வீடுகளில் நலங்கு பாட்டும், எண்ணெய் தேய்க்கும் பாட்டும் வாசிப்பதைக் கேட்கும்போது இவ்வீட்டில் பெரிய கலவரமும் குசமசவும் உண்டாகிவிட்டன. ஒரு வேளை கால் தவறிப்போய் காவேரியில் விழுந்திருப்பானே என்று நினைக்கும்போது [illegible]து. விஷயம் தெரியாது இதயம் துடிக்கிறது. [illegible] சங்கடம் சகிக்காது நெஞ்சை யள்ளுகிறது.

# பரிசுகளின் விவர[ம்]

1940-ம் ௵ ஜூன் ௴ 25-ந் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| ந. | ரூ. | சந்தா ந. | விலாசம். | போஸ்டேஜ். |
|---|---|---|---|---|
| 1 | 20 | N. 437 | Rm. Rm. Vr. Thiru Nellai Achi, Siddhanathapuram, Kilpungudi. P. O. | 2 11 |
| 2 | 15 | V. 350 | S. T. Venugopal, Lower Perak Indian Assn., Teluk Auson, F. M. S. | 3 0 |
| 3 | 10 | R. 933 | R. M. M. Ramanathan Chettiar, 11, Merchant St., Bassein P. O. (L. Burma). | 1 7 |
| 4 | 5 | M. 781 | S. Mohamed Saiyed, No. 225 Shop, Wattegama, Ceylon. | 0 13 |
| 5 | 5 | T. 152 | Tara Bai, c/o V. Sankara Rao Mudaliar, Head Clerk, Empress, Nagpur. C. P. | 0 13 |
| 6 | 5 | R. 931 | B. S. Ramaswami Iyer, Suptdg. Engineer, P. W. D., Gangadareswararkoil St, Purasawakam. | 0 13 |

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுக்கப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு உள்நாட்டினர் 1 அணாவும், வெளிநாட்டினர் $1\frac{1}{2}$ அணாவும் தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

மானேஜர்.


பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

**ஆத்மசக்தி**

முதல் பதிப்பு—ஜனவரி 1940.
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் 1940.
11 ஆப்டோன் படங்கள்
பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன
தபாற் செலவு உள்பட
உள் நாடு — ரூ. 1-4
வெளி நாடு — 2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் பல வருடங்களாக
எதிர்பார்த்த புதிய பதிப்பு

**மாதவமணி**

முற்றிலும் புதிதாக மாற்றி
பெரிதாக எழுதப்பட்டுள்ளது
முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணா
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணா
தபாற் செலவு உள்பட
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளி நாடு-2 போஸ்டல் கூப்பன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

# இந்நேர்த்தியான சுதேசி ஸோப்பு

## உங்கள் வீட்டை சுத்தமாகவும் பிரகாசத்துடனும் இருக்கச் செய்கிறது

501 ஸோப்பைக்கொண்டு வேத அழுக்கடைந்த உங்கள் வஸ்திரங்களை சுலபமாக அதுவும், உங்கள் வீட்டிலேயே சீக்கிரமாகவும் சிக்கனமாகவும் அலக்கலாம். 501 ஸோப்புக் கட்டிகளின் கனத்த ஏராளமான நுரையானது உங்கள் துணிமணிகளின் அழுக்கையெல்லாம் போக்கி புதிதுபோலாக்குகின்றன. கடுமையாக தோய்த்துக் கசக்கத் தேவையில்லையாதலால் துணிகள் நெடுநாள் உழைக்கின்றன. அதிக சுத்தமாகவும் இருக்கின்றன.



இந்த கலப்பற்ற சுதேசி ஸோப்பை உபயோகித்துப் பாருங்கள். அது தனித் தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.

**501**

**ஸோப்பு**

எல்லா ஆவசியகங்களுக்கும்.



A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19-A, வாணியர் தெரு,
மதருஸ்.

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,**
டாடாபுரம் & பம்பாய்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.